# *உள்ளடக்கம்*


அறிமுகம்................................................................................................................... 3 -5

நோக்கு, செயற்பணி, நிறுவன ஒழுங்கமைப்பு ........................................................... 6

பிரதான எதிர்பார்ப்புக்கள், பிரதான உபாயமுறையிலான அபிவிருத்தி நோக்கங்கள், செயலாற்றுகைச் சுட்டிகள்.......................................................................................... 7

2014 ஆம் ஆண்டில் அமுல்படுத்தப்பட்ட பிரதான அபிவிருத்திப் பணிகள் 8-13

2014.12.31 ஆம் திகதியில் பதவியணியினர் ................................................................ 14-15

**பிரிவு அடிப்படையிலான செயலாற்றுகை**

நிருவாகப் பிரிவு ..........................................................................................................15-17

கணக்குகள் பிரிவு .......................................................................................................17-19

உள்ளக கணக்காய்வுப் பிரிவு.........................................................................................19-20

திட்டமிடல் பிரிவு ....................................................................................................... 21-22

அபிவிருத்திப் பிரிவு .................................................................................................. 23-24

இலங்கை மகளிர் பணியகம் ........................................................................................ 24-28

தேசிய மகளிர் குழு ................................................................................................... 28-30

சிறுவர் செயலகம் ...................................................................................................... 30-33

*சிறுவர் அபிவிருத்தி மற்றும் மகளிர் அலுவல்கள் அமைச்சின்*

*2014 ஆம் ஆண்டுக்கான செயலாற்றுகை அறிக்கை*

*2012 செப்தெம்பர் 12 ஆம் திகதிய*

*அரசாங்க நிதிச் சுற்றறிக்கை இலக்கம் 402 இன்*

*அறிவுரைகளுக்கு அமைய தயார் செய்யப்பட்டுள்ளது.*

# அறிமுகம்

இலங்கையிலுள்ள பெண்கள் மற்றும் சிறுவர் பரம்பரையின் வளர்ச்சிக்காக இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 2010.11.22 ஆம் திகதிய 1681/3ஆம் இலக்க அதிவிசேட வாத்தமானி அறிவித்தலின் மூலம் பொறுப்பளிக்கப்பட்டுள்ள பணிகள், மகிந்த சிந்தனை எதிர்கால நோக்கின் கீழ் குறிப்பிடப்பட:ளடள்ள பணிகள், கற்ற பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு அறிக்கையின் சிபாரிசுகளுடன் ஒன்றிணைத்து அமுல்படுத்துவறத்கது ஏற்புடையவாறு அமைச்சுக்கு விசேட செயற்பணி பொறுப்பளிக்கப்பட்டுள்ளது.

சிறுவர் உரிமைகள் பற்றிய பிரகடனம், பெண்களுக்கு எதிரான சகல வகையிலுமான துன்புறுத்தல்களையும் ஒழித்தல் பற்றிய பிரகடனத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பெண்கள் சம்பந்தமான சமவாயத்தை அடிப்படையாகக் கொண்டு சிறுவர் மற்றும் பெண்களின் உரிமைகளை உறுதி செய்தல், பாதுகாத்தல் மற்றும் மேம்படுத்தவற்கான சட்டங்களைத் தயார் செய்தல், கொள்கைகளைத் தயார் செய்தல், நிகழ்ச்சித்திட்டங்களை வழிநடாத்தல் ஆகிய பணிகள் அமைச்சு மற்றும் அதன் கீழ் காணப்படுகின்ற நிறுவனங்களினால் வெற்றகரமாக அமுல்படுத்தப்பட்டுள்ளன.

மேலும், 2014 ஆம் ஆண்டின் வரவு செலவுத் திட்டப் பிரேரணைகளுக்கு அமைய ஒதுக்கப்பட்டுள்ள விசேட ஏற்பாடுகளின் கீழ் பெண்கள் தொழில்முயற்சிகளின் கீழ் நடாத்திச் செல்லப்படுகின்ற சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சிகளின் வெற்றி மற்றும் அது தொடர்பில் உணர்வுப்பூர்வமான தன்மையை ஏற்படுத்துவதற்காக அரசாங்க நிறுவனங்கள் மற்றும் நிதி நிறுவனங்களின் தலையீட்டுடன் ரூபா 250,000/- வரை வட்டியில்லாத லிய இசுர எனும் கடன் சான்றிதழ் முறையை பிரதேச அபிவிருத்தி வங்கிகளின் ஊடாக அமுல்படுத்தல், துன்பறுத்தலுக்கு ஆளாகின்ற பெண்கள் மற்றும் துஷ்பிரயோகத்திற்கு ஆளாகின்ற சிறுவர்களுக்கான பாதுகாப்பு இல்லங்களை விஸ்தரித்தல், பொலிஸ் நிலையங்களில் பொலிஸ் சிறுவர் மற்றும் மகளிர் பணியகங்களைத் தாபித்தல், பகல் நேர அரவணைப்பு நிலையங்களைத் தாபித்தல் மற்றும் ஆலோசனை நிலையங்களை அபிவிருத்தி செய்தல் ஆகிய பணிகள் விசேடமான முறையில் நிறைவேற்றப்பட்டுள்ளன.

பிரதேச செயலகங்களில் சிறுவர் மற்றும் மகளிர் அபிவிருத்திப் பிரிவுகளைத் தாபிப்பதன் மூலம் சமுதாயத்துக்கு வினைத்திறன்மிக்க சேவையை ஆற்றுவதும், அமைச்சின் கீழ் பிரதேச செயலகங்களில் சேவையாற்றி வருகின்ற பதவியணியினருக்கு வசதிகளைச் செய்து கொடுப்பதும் மேற்கொள்ளப்பட்டது. பெண்களின் தரவுக் கட்டமைப்பைத் தாபித்தல், விதவை மற்றும் வீட்டுத் தலைவிகளாக உள்ள பெண்களை பொருளாதார ரீதியாக வலுவூட்டுவதற்காக சுயதொழில் வாய்ப்புக்களை உருவாக்குதல், அதற்கு ஊக்குவித்தல், முன்பள்ளிப் பருவ சிறுவர்களின் போசாக்கை மேம்படுத்துவதற்கான பசும் பால் தம்லர் ஒன்றை வழங்கும் நிகழ்ச்சித்திட்டம், சிறையில் அடைக்கப்பட்டுள்ள சிறுவர்களை உரிய திகதிகளில் நீதிமன்றத்துக்கு அழைத்துச் செல்லவும், திரும்ப அழைத்து வருவதற்கும் பஸ் வண்டிகளைப் பெற்றுக் கொடுத்தல், அரசாங்க, அரசசார்பற்ற மற்றும் தனியார் ஆகிய சகல துறைகளினதும் கூட்டுப் பங்களிப்புடனும், ஒருங்கிணைப்புடனும் சிறுவர் துஷ்பிரயோகங்களைத் தடுப்பதற்காக Angel’s Network இனை அமுல்படுத்தல் மற்றுமு் 1929 எனும் சிறுவர் உதவித் தொலைபேசிச் சேவை மற்றும் 1938 மகளிர் உதவித் தொலைபேசிச் சேவையை வலுவூட்டல் ஆகிய பணிகள் இந்த ஆண்டில் வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டன.

2015 ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் அமைச்சினால் சமர்ப்பிக்கப்படவுள்ள பெண்களுக்கு எதிரான சகல வகையிலுமான துன்புறுத்தல்களையும் ஒழிப்பது பற்றிய சர்வதேச பிரகடனம் தொடர்பாக 8 ஆவது அறிக்கையைத் தயார் செய்வதும், சனாதிபதி செயலகத்தின் தேசிய கொள்கைகள் செயலகத்துடன் இணைந்து அமைச்சின் பதவியணியினரது சுகாதாரம் மற்றும் போசாக்கை மேம்படுத்துவதற்காக ‘உத்தம சிரம பூஜா’ எனும் நிகழ்ச்சித்திட்டத்தை அமுல்படுத்தியமையும் இந்த ஆண்டில் மேற்கொள்ளப்பட்டது.

## கொள்கைப் பிரகடனம்

- பெண்களுக்கு மத்தியில் சுயதொழில்வாய்ப்புக்கள் மற்றும் மேலதிக வருமான வழிமுறைகளை மேம்படுத்தத் தேவையான நிதி வசதிகளைப் பெற்றுக் கொடுப்பதற்காக மகளிர் தொழில்முயற்சி அபிவிருத்தி நிதியத்தைத் தாபித்தல்.
- பொருளாதார மற்றும் தொழில்சார் அடிப்படையிலான தகவல்களைப் பெற்றுக் கொள்வதை இலகுபடுத்தும் வகையில் பெண்களின் தரவு வங்கியொன்றை ஆரம்பித்தல்.
- குடும்பத்தில் பிரதான பொறுப்பை வகிப்பவராக பெண்கள் உள்ள சந்தர்ப்பங்களில் அவரை வீட்டுத் தலைவியாக அங்கீகரிப்பதற்குத் தேவையான சட்டரீதியான ஏற்பாடுகளைச் செய்வதன் மூலம் ஒரு சில சந்தர்ப்பங்களில் பெண்கள் எதிர்நோக்குகின்ற நிருவாக அல்லது சட்டரீதியான அசௌகரியங்களை நீக்க நடவடிக்கை மேற்கொள்ளல்.
- அரசியல் மற்றும் நிருவாகக் கட்டமைப்புக்குள் பெண்களின் பிரதிநிதித்துவத்தை மேம்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளல்.
- வடக்கு, கிழக்கு மாகாணங்களில் நிலவிய மோதல்களின் காரணமாக அல்லது 1987 – 1989 வன்முறைக் கால காரணங்களினால் அல்லது வேறு இயற்கைக் காரணங்களினால் உருவாகியுள்ள பெண்களை பிரதானமாகக் கொண்டுள்ள குடும்பங்களின் பொருளாதார அபிவிருத்தி மற்றும் பாதுகாப்பைப் பெற்றுக் கொடுப்பதற்காக அவர்களுக்கு உகந்த பொருளாதார செயன்முறையில் ஈடுபடுத்துவதற்காக 2 மில்லியன் ரூபாவுக்கு மேற்படாத கடன் தொகையை சலுகை வட்டி அடிப்படையில் பெற்றுக் கொடுக்க நடவடிக்கை மேற்கொள்ளல்.
- கிராமத்தில் தீர்மானம் மேற்கொள்கின்ற சனசபையில் பெண்களின் பிரதிநிதித்துவத்தை கட்டாயமாக்குவதன் மூலம் கொள்கைசார் தீர்மானம் மேற்கொள்வதில் பெண்களின் பங்களிப்பை மேம்படுத்தல்.
- நாட்டிலுள்ள சகல சிறுவர்களினதும் பாதுகாப்பு மற்றும் அரவணைப்பை பூரணமாக உறுதி செய்வதற்காக தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபைக்கு இணைப்புச் செய்யப்பட்டதாக பொலிஸ் சிறுவர் பணியகத்தைத் தாபித்தல்.
- சிறுவர்களுக்கு மாத்திரம் தனிப்பட்டதாக உள்ள அவர்களின் தனித்துவத்தைப் பாதுகாக்கக்கூடியவாறு நடவடிக்கை மேற்கொள்கின்ற நீதிமன்றக் கட்டமைப்பை ஆரம்பித்தல்.
- 18 வயது பூர்த்தியடைந்துள்ள போதிலும் உரிய அரவணைப்பை இழந்துள்ள அநாதைகளான சிறுவர்கள் திருமணம் செய்யும் வரை குறித்த சிறுவர் இல்லங்களிலேயே தங்கியிருப்பதற்கு அல்லது வெற்றிடங்களுக்கு அமைய அவற்றின் பதவியணிக்கு ஆட்சேர்ப்புச் செய்து கொள்ளக்கூடியவாறு சட்டங்களைத் திருத்தியமைத்தல்.
- தாய் அல்லது தந்தை சிறையிலுள்ள குடும்பங்களின் சிறுவர்களது அரவணைப்பை உறுதி செய்வதற்கான முறையியல் ஒன்றை அமுல்படுத்தல்.
- சிறுவர் செயலகத்தை, சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையைப் போன்ற பரந்தளவிலான அதிகாரங்களைக் கொண்ட அதிகார சபையொன்றாக மாற்றியமைத்தல்.
- நாடு முழுவதிலும் வியாபித்துள்ள அரசாங்க மற்றும் தனியார் துறையைச் சேர்ந்த பாலர் பாடசாலைகள், முன்பள்ளிப் பருவ அபிவிருத்தி நிலையங்கள் மற்றும் பகல் நேர பராமரிப்பு நிலையங்கள் தொடர்பான மேலே குறிப்பிடப்பட்டுள்ள நோக்கங்களை வெற்றிகொள்ளும் பொருட்டு கொள்கைகளை வகுத்தல், அமுல்படுத்தல் மற்றும் ஒழுங்குறுத்தும் பொறுப்பு மேற்படி அதிகார சபைக்குப் பொறுப்பளிக்கப்படும்.
- மேற்படி ஒழுங்குறுத்தலுக்கு அமைய பாலர் பாடசாலைகளை நடாத்திச் செல்வதற்கு அரசாங்கத்தினால் நிதி உதவி வழங்குவதை உறுதி செய்தல்.
- பாடசாலைகளுக்கு அனுமதிக்கப்படுகின்ற எந்தவொரு பிள்ளையும் பொருளாதாரக் காரணங்களின் அடிப்படையில் பாடசாலையிலிருந்து வெளியேறுவதற்கு இடமளிக்காது சிறுவர் அபிவிருத்தி மற்றும் மகளிர் அலுவல்கள் அமைச்சின் கீழ் காணப்படுகின்ற சிறுவர் பாதுகாப்பு நிதியத்தை வலுவூட்டி புலமைப் பரிசில் வழங்கும் திட்டத்தை விஸ்தரித்தல்.

## கற்ற பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு அறிக்கையின் சிபாரிசுகள்.

சிபாரிசு இலக்கம் : 9.77 – முன்னர் சிறுவர் படைவீரர்களாக செயற்பட்டு வந்த சிறுவர்களுக்கு புனர்வாழ்வளிப்பதற்காக நன்னடத்தை, சிறுவர் பராமரிப்புச் சேவைகள் ஆணையாளரின் சமுதாய அடிப்படையிலான சீர்திருத்த நிகழ்ச்சித்திட்டத்தை தொண்டர் அமைப்புக்கள் மற்றும் சிவில் சமூக அமைப்புக்களின் உதவியைப் பெற்றுக் கொண்டு நடைமுறைப்படுத்தல்.

சிபாரிசு இலக்கம் : 9.80 – தனியார் துறையில் ஒத்துழைப்புடன் மோதல்களினால் பாதிக்கப்பட்டுள்ள பிரதேசங்களில் தொழில்வாய்ப்புக்களை பரவலாக்கல். பாடசாலைக்குச் செல்லத் தவறியுள்ள முன்னர் சிறுவர் படைவீரர்களாக இருந்த சிறுவர்களை மீண்டும் பாடசாலைக்கு அனுப்புவதற்கு ஊக்குவித்தல் மற்றும் பயன்வாய்ந்த தொழில்களில் ஈடுபட்டுள்ள நிலையில் முறைசார் கல்வித் தேவைகளைப் பூர்த்தி செய்யத் தேவையான வசதிகளைச் செய்து கொடுத்தல்.

சிபாரிசு இலக்கம் : 9.87 – பெண்களின், குறிப்பாக பெரும்பாலும் தமது குடும்பங்களின் வீட்டுத் தலைவிகளாக மாறியுள்ள விதவைகளின் கடும் பொருளாதார நெருக்கடிகளைக் குறைப்பதற்கான வாழ்வாதார வாய்ப்புக்கள் மற்றும் வருமான உருவாக்க வாய்ப்புக்களைப் ஏற்படுத்திக் கொடுத்தல்.

சிபாரிசு இலக்கம் : 9.88 – அண்மைக் காலத்தில் மீளக் குடியமர்த்தப்பட்ட அங்கவீனர்களான நிலைக்கு ஆளாகியுள்ள விதவைத் தாய்மார் எதிர்நோக்குகின்ற சிக்கல்களுக்குத் தீர்வுகளைப் பெற்றுக் கொடுப்பதற்கும், உணர்வதிர்ச்சிக் கோளாறுக்கு (Trauma) ஆளாகியுள்ள பெண்களின் உளவியல் மற்றும் ஆன்மீகத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கும் உரிய சர்வதேச நிறுவனங்கள், சிவில் சமூக அமைப்புக்கள், சமுதாய அடிப்படையிலான அமைப்புக்கள் மற்றும் உதவிக் குழுக்களின் சேவைகளைப் பெற்றுக் கொள்வதற்கும், உதவிக் குழுக்களின் பங்கேற்புக்குமான வசதிகளைச் செய்தல்.

சிபாரிசு இலக்கம் : 9.89 – நீடித்த மோதல்கள் காரணமாக முறைசார் கல்வியை தொடர்ச்சியாக பேணிவந்து பெற்றுக் கொள்ள முடியாது போன பெண்களுக்கு வாய்ப்புக்களையும், தெரிவு செய்துகொள்வதற்கான வாய்ப்புக்களையும் பெற்றுக் கொடுப்பதன் மூலம் தொழில்வாய்ப்புக்களைத் தேடிப் பெற்றுக் கொள்ள மற்றும் / அல்லது வாழ்வாதார நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கான வாய்ப்புக்களைப் பெற்றுக் கொடுத்தல்.

சிபாரிசு இலக்கம் : 9.90 – நாடு முழுவதும் குறிப்பாக யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களைச் சேர்ந்த பெண்கள் பாதுகாப்பான சூழலொன்றில் வாழ்கின்றார்கள் என்றும், அடிப்படை மனிதப் பெருமைகள் பாதுகாக்கப்படுவதாகவும் உணரக்கூடியவாறு பாதுகாப்பான மற்றும் உதவியளிக்கின்ற சூழலொன்றை உருவாக்குதல்.

சிபாரிசு இலக்கம் : 9.93 – பாடசாலைகளை், பாடசாலைகளுக்கான விநியோகங்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் போன்ற பௌதீக, மனித, நிதிசார் மற்றும் வேறு உதவிகளை சிறுவர்களின் கல்விக்காக பெற்றுக் கொடுப்பதற்கு முன்னுரிமை வழங்கல். சிறுவர் பாதுகாப்புச் சேவைகளை வழங்குகின்ற வீடுகள் மற்றும் அநாதை இல்லங்களுக்கு தொடர்ச்சியாக உதவி வழங்கல். கல்விக்கான வசதிகளைச் செய்து கொடுப்பதற்கான சிபாரிசுகளின் கீழ் முன் பள்ளிப் பருவ நிலையங்கள் மற்றும் பகல் நேர பராமரிப்பு நிலையங்களை ஏற்படுத்துவதும், அவற்றுக்குத் தொடர்ச்சியாக வசதிகளைப் பெற்றுக் கொடுப்பதையும் மேற்கொள்ள முடியும்.

சிபாரிசு இலக்கம் : 9.94 – மோதல்களின் பாதகமான விளைவுகள் காரணமாக மற்றும் தமது நெருங்கிய உறவுகளை இழந்ததன் காரணமாக உணர்வதிர்ச்சிக் கோளாறுக்கு (Trauma) ஆளாகியுள்ள மற்றும் வேறு உளவியல் ரீதியான நோய்களினால் பாதிக்கப்பட்டுளள சிறுவர்களை இனங்காணல் மற்றும் தொழில்சார் ஆலொசனை உட்பட விசேட சிகிச்சை பணிகளை திட்டமிடல். இவ்வாறான சிறுவர்களை முறைசார் கல்வித் திட்டங்களின் மூலமும், மேற்படி பிரதேசங்களில் செயற்பட்டு வருகின்ற சமுதாய, சிவில் சமூகக் குழுக்களின் மூலமும் இனங்காண முடியும் என்பதுடன், பெண்களைப் பிரதானமாகக் கொண்டுள்ள குடும்பங்களிலுள்ள சிறுவர்களையும் மேற்படி வகைப்படுத்தலின் கீழ் இனங்காண முடியும்.

சிபாரிசு இலக்கம் : 9.95 – பாடசாலைகளுக்கு இலகுவாக பிரவேசித்தல், சிறந்த சுகாதார சேவை வசதிகள், விளையாட்டு மைதானங்கள், சிறுவர் பூங்காக்கள் போன்ற களியாட்ட வசதிகை ஏற்பாடு செய்வதன் மூலம் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் சிறுவர் நற்புறவு சூழலை ஏற்படுத்துவதற்கு ஊக்குவித்தல்.


## நோக்கு

சிறுவர்கள் மற்றும் பெண்களின் உரிமைகளையும், பாதுகாப்பையும் உறுதி செய்கின்றதும், அவர்களுக்கு சாதகமானதும், உணர்வுப்பூர்வமானதுமான சமூகத்தை உருவாக்கல்.

## செயற்பணி

இலங்கைச் சமூக கலாசார அடிப்படையகளுக்கு அமைய சிறுவர்கள் மற்றும் பெண்கள் தொடர்பான சர்வதேச சமவாயங்களையும், கவனத்தில் கொண்டு, அவர்களின் உரிமைகள், பூரண அபிவிருத்தி, பாதுகாப்பு மற்றும் பங்கேற்பை உறுதிசெய்கின்றவாறான கொள்கைகளை வகுத்தல், அமுல்படுத்தல், பின்னாய்வு மற்றும் மதிப்பீட்டை மேற்கொள்ளும் தேசிய பொறிமுறையாக செயற்படல்.

## நிறுவன ஒழுங்கமைப்பு



# பிரதான எதிர்பார்ப்புக்கள்

- சிறுவர் உரிமைகளைப் பாதுகாத்தல் மற்றும் அபிவிருத்திக்கான தேசிய கொள்கையைத் தயார் செய்தல்.
- பெண்கள் உரிமைகளைப் பாதுகாத்தல் மற்றும் அபிவிருத்திக்கான தேசிய திட்டத்தைத் தயார் செய்தல்.
- சிறுவர் மற்றும் பெண்களின் அபிவிருத்திக்கான பொறிமுறையைத் தயார் செய்து அமுல்படுத்தத் தேவையான வசதிகளை செய்துகொடுத்தல்.
- அரச நிறுவனங்கள், அரசசார்பற்ற அமைப்புக்கள், வெளிநாட்டு நிறுவனங்கள் மற்றும் தனியார் துறையை ஒருங்கிணைப்புச் செய்து சிறுவர் மற்றும் பெண்களுக்கான நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்தல்.
- சிறுவர் மற்றும் பெண்களின் பாதுகாப்புக்கும், அபிவிருத்திக்குமான நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்தல்.
- அமைச்சு மற்றும் அதற்குரித்தான பிரதிநிதித்துவ நிறுவனங்களினால் மேற்கொள்ளப்படுகின்ற பாதுகாப்பு மற்றும் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களை கண்காணிப்புச் செய்தல்.
- சிறுவர்கள் மற்றும் பெண்கள் தொடர்பாக செயற்படுவதற்கு இலங்கை கட்டுப்பட்டுள்ள சகல சர்வதேச பிரகடனங்கள் மற்றும் இணக்கப்பாடுகளுக்குமான சட்டங்கள், கொள்கைகள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்களைத் தயார் செய்தல்.
- சிறுவர் துஷ்பிரயோகத்தை ஒழிப்பதற்குத் தேவையான சட்டரீதியான மற்றும் தேசிய கொள்கைகளை உள்ளடக்கிய சூழலொன்றைத் தாபித்தல்.

# உபாயமுறையிலான அபிவிருத்தி நோக்கங்கள்

1. உயர்தரம்மிக்க முன்பள்ளிப் பருவ அபிவிருத்தி மற்றும் அரவணைப்புச் சேவையை உறுதிசெய்தல்.
2. இல்லமயமாக்கப்பட்டுள்ள சிறுவர்களின் நலன்புரிக்கான உரிமைகளை உறுதி செய்வதும், அவர்களை சமூகமயப்படுத்துவதும்.
3. சிறுவர் துஷ்பிரயோகத்தை தடுப்பதும், குறைப்பதும்.
4. பாதுகாப்பற்ற பெண்களின் குடும்பங்களை அபிவிருத்தி செய்தல்.
5. சிறுவர்கள் மற்றும் பெண்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கான சட்டங்கள் மற்றும் கொள்கைசார் தலையீடுகள்.
6. இலங்கை கட்டுப்பட்டுள்ள சர்வதேச சமவாயங்களுக்குப் பொருத்தமான உள்ளூர் சிறுவர் மற்றும் பெண்கள் அபிவிருத்தி உபாயமுறைகளைத் தாபித்தல்.

# பிரதான செயலாற்றுகைச் சுட்டிகள்

01. 2015 ஆம் ஆண்டளவில் இலங்கையில் பதிவு செய்துள்ள சகல பாலர் பாடசாலைகள் மற்றும் முன் பள்ளிப் பருவ அபிவிருத்தி நிலையங்கள் ஆகக் குறைந்த தரநியமங்களைப் பூர்த்தி செய்திருத்தல்.
02. 2015 ஆம் ஆண்டளவில் இலங்கையிலுள்ள சிறுவர் இல்லங்களில் 90% ஆன இல்லங்களை சிறுவர் நற்புறவுச் சூழலைக் கொண்டுள்ள ஏ தரத்தைச் சேர்ந்த இல்லங்களாக மாற்றியமைத்தல்.
03. தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் பிரதான நடவடிக்கைப் பிரிவை வலுவூட்டுவதன் மூலம் சிறுவர் துஷ்பிரயோகத்தைத் தடுப்பதும், குறைப்பதும்.
04. விதவைகளான மற்றும் வீட்டுத் தலைவிகளாக பெண்கள் காணப்படுகின்ற குடும்பங்களில் 50% இற்கு புதிய வாழ்வாதார அபிவிருத்தி வாய்ப்புக்களை ஏற்படுத்தல்.
05. சிறுவர்கள் மற்றும் பெண்களின் உரிமைகளையும், பாதுகாப்பையும் உறுதி செய்வதற்கான சட்டரீதியான, கொள்கைசார் தலையீடுகளை மேம்படுத்தல்.

# 2014 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட பிரதான அபிவிருத்திப் பணிகள்

## 2014 ஆம் ஆண்டின் வரவு செலவுத்திட்ட பிரேரணைகளை அமுல்படுத்தல்

### பொலிஸ் சிறுவர் மற்றும் மகளிர் பணியகங்களைத் தாபித்தல்

சிறுவர் துஷ்பிரயோகங்கள் மற்றும் பெண்களுக்கு எதிரான துன்புறுத்தல்களை தடுப்பதற்காக பொலிசாரினால் மேற்கொள்ளப்படுகின்ற செயற்பணியை வலுவூட்டுவதற்காக பொலிஸ் சிறுவர் மற்றும் மகளிர் பணியகங்கள் தாபிக்கப்பட்டன.

பதவி, கெபிதிகொல்லேவ, கல்கிரியாகம, அரலகங்வில, ஹிங்குரக்கொட, பிபில, சியம்பலாண்டுவ, கந்தகெட்டிய, காத்தாங்குடி, வாழைச்சேனை, மஹஓயா, திருக்கோவில், பானம, மூதூர், கந்தளாய், யாழ்ப்பாணம், ஊர்காவற்றுறை, முல்லைத்தீவு, முலங்காவில், தலைமன்னார், மடு, பிங்கிரிய, கல்கமுவ, புத்தளம், கொத்மலை ஆகிய பொலிஸ் நிலையங்களில் இப்பிரிவுகளைத் தாபித்தல், இப்பிரிவுகளுக்கு அலுவலக உபகரணங்கள் மற்றும் விளையாட்டு முற்றங்களை ஏற்பாடு செய்தல் போன்ற இந்த ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டன. இதற்கென 107.34 மி.ரூ. செலவிடப்பட்டுள்ளது.

### பெண்களுக்கான அரவணைப்பு நிலைங்களை நிர்மாணித்தல்

துன்புறுத்தலுக்கு ஆளானவர்களைப் பாதுகாத்தல், புனர்வாழ்வளித்தல், அவர்கள் மத்தியில் தன்னம்பிக்கையை கட்டியெழுப்பல் மற்றும் வலுவூட்டுவதை நோக்காகக் கொண்டு அவர்களுக்கான உதவிச் சேவைகளை மேம்படுத்துவதும், பெண்களுக்கு எதிரான வன்முறைகளுக்குத் தீர்வுகளை வழங்குவதற்குமாக பெண்கள் அரவணைப்பு நிலையங்கள் மருதங்கேணி, மன்முனை வடக்கு, கரைதுறைப்பற்று ஆகிய பிரதேச செயலாளர் பிரிவுகளில் நிர்மாணிக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

### பிரதேச செயலகங்களில் சிறுவர் மற்றும் மகளிர் அபிவிருத்திப் பிரிவுகளைத் தாபித்தல்

சிறுவர் மற்றும் மகளிர் அபிவிருத்திக்கான பொறிமுறையை அமுல்படுத்தத் தேவையான வசதிகளைச் செய்வதற்காக இப்பிரிவை பிரதேச செயலகங்களில் தாபிப்பது ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

சிறுவர் மற்றும் பெண்கள் தொடர்பாக அரசாங்கம் அமுல்படுத்துகின்ற நிகழ்ச்சித்திட்டங்களை பிரதேச செயலாளர் பிரிவு மட்டத்தில் சிறந்த ஒருங்கிணைப்புடனும், பிரதேச செயலாளர்களின் அண்மித்த கண்காணிப்பின் கீழும் பேணிவருவதற்காக பிரதேச செயலகங்களில் சிறுவர் மற்றும் மகளிர் விடயம் தொடர்பான நடவடிக்கைகளை ஒன்றிணைப்பதன் மூலம் வினைத்திறனும், உற்பத்தித்திறனும்மிக்க சேவையை ஏற்படுத்த இதன் மூலம் எதிர்பார்க்கப்படுகின்றது. இதற்காக 31.542 மி.ரூ. செலவிடப்பட்டுள்ளது.

## ➢ சிறுவர் அரவணைப்பு இல்லங்களை நிர்மாணித்தல்

கைவிடப்பட்ட, அநாதைகளான, உரிமைகள் மீறப்படுகின்ற சிறுவர்களின் அரவணைப்பு மற்றும் நலன்புரியை உறுதி செய்வதற்காக பின்வருமாறு சிறுவர் அரவணைப்பு இல்லங்கள் நிர்மாணிக்கப்பட்டுள்ளன.

ஊவா மாகாணம் - சிறுவர்களை தடுத்துவைக்கும் இல்லத்தை நிர்மாணித்தல், கிழக்கு மாகாணம் - பசழறவர் பாதுகாப்பு இல்லத்தை நிர்மாணித்தல், சபறகமுவா மாகாணம் - சிறுமிகளை தடுத்துவைக்கும் இல்லத்தின் பாதுகாப்பற்ற வேலையை நிர்மாணித்தல், வடமேல் மாகாணம் - அரசாங்க பாலிகா தடுப்பு இல்லத்தை நிர்மாணிப்பதும், புதுப்பிப்பதும், வட மாகாணம் - சிறுமிகளின் தடுப்பு நிலையத்தை நிர்மாணித்தல், மத்திய மாகாணம் - சிறுமிகளின் தடுப்பு இல்லத்தை நிர்மாணித்தல், வடமத்திய மாகாணம் - சிறுமிகளின் தடுப்பு இல்லத்தை நிர்மாணிப்பதும், சிறுமிகளுக்கான சான்றுப்படுத்தப்பட்ட பாடசாலையை நிர்மாணிப்பதும். இதற்காக 122.41 மி.ரூ. செலவிடப்பட்டுள்ளது.

## ➢ பகல்நேர பராமரிப்பு நிலையங்களை நிர்மாணித்தல்

முன்பள்ளிப் பருவ சிறுவர்களின் பாதுகாப்பையும், அரவணைப்பையும் உறுதி செய்வதற்காக பச்சிலைப்பள்ளி, மட்டக்களப்பு, பொலன்னறுவை புதிய நகரம், நுவரெலியா மாவட்ட செயலகம், மொனராகலை, அநுராதபுரம் ஆகிய இடங்களில் 06 நிலையங்கள் தாபிக்கப்படுவதுடன், இதற்காக 76.56 மி.ரூ. செலவிடப்பட்டுள்ளது.

பொலிஸ் சிறுவர் மற்றும் மகளிர் பணியகம் - யாழ்ப்பாணம் பகல்நேர பராமரிப்பு நிலையம் - மட்டக்களப்பு

பொலிஸ் சிறுவர் மற்றும் மகளிர –யாழைப்பானம்




பகல்நேர பராமரிப்பு நிலையங்கள்- மட்டகளப்பு



பெண்கள் அரவணைப்பு நிலையம(முல்லைத்தீவு)



சிறுவர் மற்றும் மகளிர் அபிவிருத்தி பிரிவு- வாகரை



## கற்ற பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு அறிக்கையின் சிபாரிசுகள் செய்யபடவேண்டும்

| சிபாரிசு இல. | அமுல்படுத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டம் |
|---|---|
| **9.77** | சகல சிறுவர் படைவீரர்களுக்கும் புனர்வாழ்வளித்து விடுவித்தல். இதற்காக சமுதாய அடிப்படையிலான அமைப்புக்களின் பிரேரணைகளைப் பெற்றுக் கொள்ளப்பட்டதுடன், வவுனியா மற்றும் கிளிநொச்சியில் அறிவுறுத்தல் நிகழ்ச்சித்திட்டங்கள் இரண்டும் (02) நடாத்தப்பட்டன. |
| **9.87** | இதன் கீழ் முதலில் அமைச்சு யுத்தத்தினால் விதவையாக்கப்பட்ட பெண்களின் தரவுகளை ஒன்றுதிரட்டியது. அதற்கமைய பின்வருமாறு தரவுகளைக் குறிப்பிடலாம்.<br>யாழ்ப்பாணம் 2304 மன்னார் 660<br>முல்லைத்தீவு 903 வவுனியா 1316<br>கிளிநொச்சி 102<br><br>கிராம அலுவலர் மட்டத்தில் சேகரிக்கப்பட்ட தரவுகள் திவிநெகும நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் வசதிகளைப் பெற்றுக் கொடுப்பதற்காக வழங்கப்பட்டன.<br><br>விதவைகள் மற்றும் வீட்டுத் தலைவிகளாக உள்ள பெண்களின் வாழ்வாதார அபிவிருத்திக்கான நிகழ்ச்சித்திட்டங்களை ஒழுங்கு செய்தல்.<br><br>கேகாலை மாவட்டத்தின் ஒவ்வொரு பிரதேச செயலகத்திலும் வீட்டுத் தலைவிகளாக உள்ள பெண்கள் 331 பேருக்கு அத்தியாவசிய உணவுப் பொருட்களும், உபகரணங்களும் வழங்கப்பட்டன.<br><br>பெண்கள் 283 பேருக்கு சுழல் கடன் வசதிகளைப் பெற்றுக் கொடுத்தல்.<br><br>தோட்டப்புறப் பெண்கள் 8904 பேருக்கு தொழில்முயற்சிசார் அபிவிருத்தி அறிவுறுத்தல் நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டன.<br><br>கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு கெயார் அமைப்பின் ஒத்துழைப்புடன் விதவை மற்றும் வீட்டுத் தலைவிகளான பெண்களுக்கான விசேட அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களை ஆரம்பித்தல்.<br><br>மனிதவலு ஆற்றல் அபிவிருத்தியின் போது GIZ அமைப்பின் அனுசரணையுடன் அமைச்சின் கீழ் வெளிக்கள அலுலவர்கள் மற்றும் சமுதாய அடிப்படையிலான அமைப்புக்களின் அலுவல்களுக்கான பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்தல், கெயார் சர்வதேச நிறுவனத்தின் அனுசரணையின் கீழ் கிளிநொச்சி, முல்லைத்தீவு சிறுவர் மற்றும் பெண்கள் அபிவிருத்திப் பிரிவுகளை அபிவிருத்தி செய்தல், கடின வீதிகளைக் கொண்ட பிரதேசங்களைச் சேர்ந்த மகளிர் அபிவிருத்தி அலுவலர்கள் 22 பேருக்கு மோட்டார் சைக்கில்கள் வழங்கப்பட்டமை.<br><br>பெண்களை அரசியல் துறையில் வலுவூட்டுவதற்காக டிப்ளோமா பாடநெறியை தமிழ் மொழி மூலம் நடாத்தல். |
| **9.88** | இதற்காக அமைச்சுக்கள் மட்டத்திலான கூட்டங்களை நடாத்தி குறித்த முகவர் நிறுவனங்கள் சிவில் அமைப்புக்களின் குழுக்களுடன் காணப்படுகின்ற சேவைகள் மற்றும் ஏற்பாடுகளை நிர்ணயித்தல்.<br><br>தேசிய அரசசார்பற்ற அமைப்புக்களின் அனுசரணையின் கீழ் இலக்குக் குழுக்களுக்கு புதிய நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்தல்.<br><br>நடாத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள் தொடர்பான தகவல்களை சேகரித்தல். |

| சிபாரிசு இல. | அமுல்படுத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டம் |
|---|---|
| 9.89 | இலங்கை மகளிர் பணியகத்தினால் பெண்கள் 1950 பேருக்கு அறிவுறுத்தும் நிகழ்ச்சித்திட்டங்கள் 24 நடாத்தப்பட்டுள்ளதுடன், மட்டக்களப்பு மாவட்டத்தில் உற்பத்திகளை விற்பனை செய்யும் சந்தையொன்றும் நடாத்தப்பட்டது.<br><br>இளம் பிராய சிறுவர், சிறுமியர்கள் 6467 பேருக்கு வாழ்க்கைத் திறன் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்தல்.<br><br>சமுதாய அடிப்படையிலான அமைப்புக்களின் அங்கத்தவர்களான பெண்கள் 150 பேருக்கு அறிவுறுத்தல் நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்தல்<br><br>மகளிர் நடவடிக்கை அமைப்புக்கள் 18 இனை வலுவூட்டல்.<br><br>தோட்டப்புற பெண்கள் 1441 பேருக்கு சமுதாயத்தை வலுவூட்டும் நடவடிக்கைகளை மேற்கொள்ளல். |
| 9.90 | இதற்காக தேசிய மகளிர் குழுவும், இலங்கை மகளிர் பணியகமும் பின்வரும் நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்தியுள்ளன.<br><br>பெண்களுக்கு எதிராக இடம்பெறுகின்ற வன்முறைகள் மற்றும் ஆட்கடத்தல்களைத் தடுப்பது தொடர்பாக சமுதாயத் தலைவர்கள் மற்றும் மக்களை அறிவுறுத்தும் நிகழ்ச்சித்திட்டங்கள் 15 நடாத்தப்பட்டமை.<br><br>பெண்களின் உரிமைகளைப் பாதுகாத்தல் மற்றும் பால்நிலைசார் சமஅந்தஸ்தை உறுதி செய்வதற்காக அறிவுறுத்தும் நிகழ்ச்சித்திட்டங்கள் 15 இனை நடாத்தியமை.<br><br>பெண்களுக்கு எதிராக இடம்பெறுகின்ற வன்முறைகள் தொடர்பாக பால்நிலைசார் சமஅந்தஸ்தை உறுதி செய்யும் பொருட்டு அறிவுறுத்தும் நிகழ்ச்சித்திட்டங்கள் 03 இனை நடாத்தியமை.<br><br>சிறுவயதில் கர்ப்பமடைவதைத் தடுப்பதற்காக பாடசாலை சிறுமியர்களை அறிவுறுத்தும் 21 நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டமை.<br><br>யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, கிளிநொச்சி, மன்னார் ஆகிய மாவட்டங்களில் பெண்களுக்கு எதிரான வன்முறைகளைத் தடுப்பதற்கான 21 நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டமை.<br><br>பால்நிலைசார் அடிப்படையிலான துன்புறுத்தல்களை குறைப்பதற்கான ஆலோசனைக் கட்டமைப்பை வலுவூட்டுவதற்காக வெளிக்கள அலுவலர்களுக்காக இரண்டு செயலமர்வுகள் நடாத்தப்பட்டன.<br><br>விவரணத் திரைப்படங்கள், துண்டுப் பிரசுரங்கள் ஆகிய ஊடகங்களைப் பயன்படுத்தி சிறுவயதில் திருமணம் செய்தல் மற்றும் பாலியல் மற்றும் பால்நிலைசார் அடிப்படையில் ஏற்படுகின்ற துன்புறுத்தல்கள் பற்றி அறிவுறுத்தப்பட்டது. |

| சிபாரிசு இல. | அமுல்படுத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டம் |
|---|---|
| 9.93 | இதற்காக சிறுவர்கள் 648 பேருக்கு நிவாரண உதவியும், மருத்துவ உதவியும் வழங்கியமை.<br>கல்வி உதவி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் சிறுவர்கள் 5634 பேருக்குப் பயன்களைப் பெற்றுக் கொடுத்தமை.<br>சிறுவர் இல்லங்கள் 12 ஐ அபிவிருத்தி செய்வதும், அலுவலர்கள் 391 பேருக்கு திறன்களை அபிவிருத்தி செய்வதும்.<br>சிறுவர்கள் 1660 பேருக்கு கெப்பகரு மாபிய (பெற்றோர் பாதுகாவளர்) திட்டத்தின் கீழ் பயன்களைப் பெற்றுக் கொடுத்தல். |
| 9.94 | இதன் கீழ் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களிலும், இரத்தினபுரி, கேகாலை, நுவரெலியா, பதுளை ஆகிய மாவட்டங்களின் சிறுவர்களுக்காக சிறுவர் பாதுகாப்பு மற்றும் உளவியல் சமூக உதவிகளைப் பெற்றுக் கொடுப்பதற்கான அறிவுறுத்தல் நிகழ்ச்சித்திட்டங்கள் 1324 நடாத்தப்பட்டுள்ளன.<br>சிறுவர் பாதுகாப்பு பொறிமுறையை அபிவிருத்தி செய்தல் மற்றும் வலுவூட்டுவதற்காக சிறுவர் கழகங்களின் சிறுவர்களை அறிவுறுத்தும் 98 நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டுள்ளன.<br>புதிதாக 24 சிறுவர் கழகங்கள் தாபிக்கப்பட்டமை.<br>9 மாதிரிக் கிராமங்கள் தாபிக்கப்பட்டமை.<br>சிறுவர் ஊழியத்தைத் தடுப்பதற்கான தேசிய நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் தோட்டப்புற சமுதாயம் மற்றும் அரச அலுவலர்களை அறிவுறுத்தும் நிகழ்ச்சித்திட்டங்கள் நுவரெலியா மாவட்டத்தில் நடாத்தப்பட்டன.<br>சிறுவர் நெறிபிறழ்வைக் குறைப்பதற்காக பெரியவர்களுக்கான 264 அறிவுறுத்தும் நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டன. |
| 9.95 | வவுனியா தெற்கு, நல்லூர், வடமாரச்சி வடக்கு, மன்னார், முல்லைத்தீவு மற்றும் காரைநகரில் முன்பள்ளிப் பருவ பாதுகாப்புக்கான 05 மாதிரிக் கிராமங்கள் தாபிக்கப்பட்டமை.<br>முல்லைத்தீவு மாவட்டத்தில் கரைதுறைப்பற்று பிரதேச செயலாளர் பிரிவில் 02 பாலர் பாடசாலைகளுக்கு கட்டிடங்கள் நிர்மாணிக்கப்பட்டமை.<br>அம்பாரை மாவட்ட செயலகக் கட்டிடத் தொகுதியில் பகல்நேர பராமரிப்பு நிலையமொன்று தாபிக்கப்பட்டமை.<br>வடக்கு, கிழக்கு மாகாணங்கள் மற்றும் தோட்டப்புற சிறுவர்கள் 108743 பேருக்கு ஒரு கிளாஸ் பசும்பால் வழங்கும் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் பால் வழங்கப்பட்டமை.<br>தோட்டப்புற மற்றும் வடக்கு, கிழக்கு மாகாணங்களின் பாலர் பாடசாலைகளுக்கு துப்பரவேற்பாட்டு வசதிகள் செய்து கொடுக்கப்பட்டமை. |

| சிபாரிசு இல. | அமுல்படுத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டம் |
|---|---|
| | நுவரெலியா, கேகாலை, மாத்தளை, பதுளை, கண்டி, இரத்தினபுரி, காலி ஆகிய மாவட்டங்கள் மற்றும் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் பாலர் பாடசாலைகளுக்கென 121 சிறுவர் பூங்காக்கள் மேம்படுத்தப்பட்டமை.<br><br>பெற்றோர், பாதுகாவளர்கள், முன்பள்ளிப் பருவ அபிவிருத்திக்கான சேவைகளை ஆற்றுவோர் மற்றும் பொது மக்களுக்காக முன்பள்ளிப் பருவ அபிவிருத்தி பற்றி அறிவுறுத்தும் நிகழ்ச்சித்திட்டங்கள் 251 நடாத்தப்பட்டமை.<br><br>உதவி தேவைப்படுகின்ற சிறுவர்கள் 1475 பேருக்கு பாடசாலை உபகரணங்களும், ஏனைய நிதி உதவிகளும் வழங்கப்பட்டமை. (இரத்தினபுரி, ஹம்பாந்தோட்டை, காலி, நுவரெலியா, மாத்தறை, கண்டி, வடக்கு, கிழக்கு மாகாணங்கள்)<br><br>தோட்டப்பிரதேசங்களில் 11 சிறுவர் நூலகங்கள் தாபிக்கப்பட்டமை.<br><br>1845 பாடசாலை பாதுகாப்புக் குழுக்கள் தாபிக்கப்பட்டமையும், வலுவூட்டப்பட்டமையும். (இரத்தினபுரி, கேகாலை, நுவரெலியா, பதுளை ஆகிய மாவட்டங்கள், வடக்கு, கிழக்கு மாகாணங்கள்)<br><br>வடக்கு, கிழக்கு மாகாணங்கள் மற்றும் தோட்டத்துறையில் முன்பள்ளிப் பருவ அபிவிருத்திக் குழுக்களை கிராமிய மட்டத்திலும், பிரதேச மட்டத்திலும், மாவட்ட மட்டத்திலும், மாகாண மட்டத்திலும் தாபிப்பதும், வலுவூட்டுவதும்.<br><br>2014.03.14 ஆம் திகதி வவுனியா தெற்கு வெஹெரதென்னையில் பியவர பாலர் பாடசாலை ஆரம்பித்து வைக்கப்பட்டமை.<br><br>மன்னார் மற்றும் மட்டக்களப்பு மாவட்டங்களில் சிறுவர் நற்புறவுத் தொகுதிகள் 02 தாபிக்கப்பட்டமை. |




# 2014.12.31 ஆம் திகதிக்கான பதவியணியினர்

| தொடர் இல. | பதவி | சேவை | தரம் | அங்கீகரிக்கப்பட்ட பதவியணி | தற்போது காணப்படுகின்ற பதவியணி |
|---|---|---|---|---|---|
| | **சிரேஷ்ட மட்டம்** | | | | |
| **01.** | செயலாளர் | இ.நி.சே. | (விசேட) | 01 | 01 |
| **02.** | மேலதிக செயலாளர் (நிருவாகமும், நிதியும்) | இ.நி.சே. | (விசேட) | 01 | 01 |
| **03.** | மேலதிக செயலாளர் (அபிவிருத்தி) | இ.நி.சே. | (விசேட) | 01 | 01 |
| **04.** | சிரேஷ்ட உதவிச் செயலாளர் | இ.நி.சே. | 1 | 01 | 01 |
| **05.** | பிரதம கணக்காளர் | இ.க.சே. | 1 | 01 | 01 |
| **06.** | பிரதம உள்ளகக் கணக்காய்வாளர் | இ.க.சே. | 1 | 01 | 01 |
| **07.** | பணிப்பாளர் (அபிவிருத்தி) | இ.நி.சே. | 1 | 01 | 01 |
| **08.** | பணிப்பாளர் (இலங்கை மகளிர் பணியகம்) | இ.நி.சே. | 1 | 01 | 01 |
| **09.** | பணிப்பாளர் (சிறுவர் செயலகம்) | இ.நி.சே. | 1 | 01 | 01 |
| **10.** | பணிப்பாளர் (திட்டமிடல்) | இ.தி.சே. | 1 | 01 | 01 |
| **11.** | கணக்காளர் | இ.க.சே. | 11/111 | 02 | 01 |
| **12.** | பிரதிப் பணிப்பாளர் / உதவிப் பணிப்பாளர் | இ.நி.சே. | 11/111 | 05 | 05 |
| **13.** | பிரதிப் பணிப்பாளர் / உதவிப் பணிப்பாளர் | இ.தி.சே. | 11/111 | 02 | 04 |
| **14.** | பிரதிப் பணிப்பாளர் / உதவிப் பணிப்பாளர் | திணைக்கள | 11/111 | 02 | 0 |
| **15.** | உதவிச் செயலாளர் | இ.நி.சே. | 11/111 | 01 | 01 |
| **16.** | பிரதிப் பணிப்பாளர் (ITC) | இ.த.தொ.சே. | 11/111 | 01 | 0 |
| **17.** | சட்ட அலுவலர் | திணைக்கள | 11/111 | 03 | 01 |
| | **மூன்றாம்நிலை மட்டம்** | | | | |
| **18.** | நிருவாக அலுவலர் | அரச முகாமைத்துவ உதவியாளர் சேவை (சிறப்புத்தரம்) | MN-07 | 01 | 01 |
| **19.** | ஆராய்ச்சி அலுவலர் | திணைக்கள | MN-06 | 01 | 0 |
| **20.** | மொழிபெயர்ப்பாளர் | மொழிபெயர்ப்பாளர் சேவை | MN-06 | 02 | 1 |
| **21.** | ஆலோசனை அலுவலர் | திணைக்கள | MN-05 | 13 | 10 |
| | **இரண்டாம் நிலை மட்டம்** | | | | |
| **22.** | செயலாளரின் ஒருங்கிணைப்புச் செயலாளர் | தற்காலிக | | 01 | 01 |
| **23.** | அபிவிருத்தி உதவியாளர் | இணைந்த சேவைகள் | MN-04 | 24 | 24 |
| **24.** | முன்பள்ளிப் பருவ அபிவிருத்தி உதவியாளர் | திணைக்கள | MN-04 | 175 | 94 |
| **25.** | மகளிர் அபிவிருத்தி உதவியாளர் | திணைக்கள | MN-04 | 335 | 284 |
| **26.** | வரவு செலவுத்திட்ட உதவியாளர் | இணைந்த சேவைகள் | MN-04 | 01 | 01 |
| **27.** | அபிவிருத்தி உதவியாளர் | அபிவிருத்தி உதவியாளர் சேவை | MN-04 | 709 | 517 |
| **28.** | நூலகர் | நூலகர் சேவை | MN-03 | 01 | 0 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **29.** | நூலக உதவியாளர் | திணைக்கள | MN-01 | 01 | 01 |
| **30.** | அரச முகாமைத்துவ உதவியாளர் | அரச முகாமைத்துவ உதவியாளர் சேவை (1,11,111) | MN-02 | 40 | 30 |
| **31.** | நிழற்படப் பிடிப்பாளர் | திணைக்கள | MT-01 | 01 | 01 |
| **32.** | வீடியோ ஒளிப்படப்பிடிப்பாளர் (தற்காலிக) | திணைக்கள | MT-01 | 01 | 01 |
| **33.** | த.தொ. ம. தொ. உ. | த.தொ.ம. தொ.உ. | MT-01 | 03 | 01 |
| **34.** | வரவேற்பு அலுவலர் | திணைக்கள | MN-01 | 01 | 01 |
| **35.** | நிவாரணச் சகோதரி | திணைக்கள | MN-01 | 134 | 125 |
| | **ஆரம்ப மட்டம்** | | | | |
| **36.** | சாரதி | இணைந்த சாரதி சேவை | PL-02 | 30 | 30 |
| **37.** | அலுவலக சிற்றூழியர் | அலுவலக சிற்றூழியர் | PL-01 | 26 | 26 |
| **38.** | விடுதித் தொழிலாளி | திணைக்கள | PL-01 | 01 | 01 |
| **39.** | ஆலோசனைச் சேவை தொழிலாளி | திணைக்கள | PL-01 | 11 | 11 |

# பிரிவு அடிப்படையிலான செயலாற்றுகை

## நிருவாகப் பிரிவு

### பிரதான செயற்பணிகள்

01. அமைச்சின் பதவியணியினர் தொடர்பான தாபன நடவடிக்கைகள், ஒருங்கிணைப்பு மற்றும் ஒழுக்காற்றுப் பணிகளை பேணிவருதல்.
02. அமைச்சுக்கென அங்கீகரிக்கப்பட்டுள்ள பதவிகளில் ஏற்படுகின்ற வெற்றிடங்களுக்கான ஆட்சேர்ப்புக்களை மேற்கொள்ளல்.
03. அமைச்சின் கருத்திட்டங்கள் மற்றும் பணிகளை நிறைவேற்றத் தேவையான புதிய பதவிகளை நி.பி. 71 இற்கு அமைய ஏற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.
04. அரசாங்க நிருவாக சுற்றறிக்கை இலக்கம் 6/2006 இற்கு அமைய திணைக்களப் பதவிகளுக்கு ஆட்சேர்ப்புச் செய்யும் ஒழுங்குமறைகள் பதவி உயர்வு ஒழுங்குமுறைகளின் திருத்தங்களை தயார் செய்து அங்கீகரித்துக் கொள்ளல் மற்றும் பதவி உயர்வு முறையியலை அமுல்படுத்தல்.
05. பல்வேறு துறைகளுடனும் ஒருங்கிணைப்புச் செய்து பாராளுமன்ற வினாக்களுக்கான விடைகளைப் பெற்றுக் கொடுத்தல்:, அமைச்சரவை விஞ்ஞாபனங்களைத் தயார் செய்தல் மற்றும் இந்த அமைச்சின் ஆலோசனைக் குழுக் கூட்ட நடவடிக்கைகள்.
06. அமைச்சர் அலுவலகம் மற்றும் பிரதி அமைச்சர் அலுவலகத்துக்கு உரித்தான பதவியணியினரின் தாபன நடவடிக்கைகள்.
07. தபால்களை பிரிவுகளுக்கு விநியோகிப்பதும், வெளியே அனுப்பும் கடிதங்களை தபால் மூலம் அனுப்புவதும்.
08. வழங்கல் மற்றும் சேவைகளைப் பேணிவருதல் (பாதுகாப்பு, துப்பரவேற்பாடு, மின்சாரப் பட்டியல்கள், நீர்ப் பட்டியல்கள், செய்திப்பத்திரிகைகள், போக்குவரத்து வசதிகள், தொலைபேசி, புகையிரத ஆணைச்சீட்டு, புதகையிரத பயணச்சீட்டுக்கள், உபசரணை நடவடிக்கைகள், வாகனக் காப்புறுதி)

09. வாகனக் குழுமத்தைப் பேணிவருதல், வாகனங்களை அகற்றல், புதுப்பித்தல் மற்றும் புதிய வாகனங்களைக் கொள்வனவு செய்தல்.
10. கட்டிடங்கள் மற்றும் உபகரணங்களின் பராமரிப்புப் பணிகள்.
11. முற்பணக் கடன், உற்சவ முற்பணம், விசேட முற்பணம், இடர் கடன், ஆதனக் கடன் மற்றும் அக்ரஹார காப்புறுதித் திட்டத்தின் தாபன நடவடிக்கைகள்.
12. பியகம மகளிர் செவண விடுதியைப் பேணிவருதல்.
13. அமைச்சின் பதவியணியினரைப் பயிற்றுவித்தல்.

## i. பதவியணி நடவடிக்கைகள்

அமைச்சின் கீழ் சேவையாற்றுகின்ற பதவியணியினரின் எண்ணிக்கை 1261 ஆகும். மேற்படி பதவியணி அலுவலர்கள் அனைவரினதும் சுயவிபரக் கோவைகளை முறையாகப் பேணிவருதல், இற்றைப்படுத்தல், நாளாந்த லீவு பற்றிய கடமை நடவடிக்கைகள், சம்பள ஏற்றங்களைப் பெற்றுக் கொடுத்தல், இடமாற்றங்கள், ஓய்வுறுத்தல் போன்ற நிருவாக நடவடிக்கைகள் முறையாக மேற்கொள்ளப்பட்டுள்ளன. மேலும், பதவியணியினர் மற்றும் அமைச்சர்களின் பதவியணியினர் உள்ளிட்ட அலுவலர்களின் தொலைபேசிப் பட்டியல்களை தீர்த்தல் தொடர்பான நடவடிக்கைகளும் இப்பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றன.

பதவியணியினரின் அறிவு, தொழில்நுட்ப ஆற்றல் மற்றும் மொழித் தேர்ச்சியை மேம்படுத்துவதை நோக்காகக் கொண்டு உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு பயிற்சிப் பாடநெறிகளுக்கு அலுவலர்கள் தொடர்ந்தும் பங்கேற்கச் செய்யப்பட்டுள்ளார்கள். இதன் கீழ் 2014 ஆம் ஆண்டில் பல்வேறு பயிற்சிப் பாடநெறிகள், செலமர்வுகளில் பதவியணியினர் பங்கேற்றுள்ளனர்.

## ii. பராமரிப்பு நடவடிக்கைகள்

அமைச்சுக்கு உரித்தான சகல பிரிவுகளிலுமுள்ள அலுவலக உபகரணங்களைப் புதுப்பித்தல் மற்றும் அமைச்சுக்கு உரித்தான சகல வாகனங்களினதும் பராமரிப்பு நடவடிக்கைகள் தொடர்பாக நிருவாகப் பிரிவு உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

## iii. இணை நிறுவனங்களின் தாபன நடவடிக்கைகள்

அமைச்சின் கீழ் இயங்கி வருகின்ற நன்னடத்தை, சிறுவர் பராமரிப்புச் சேவைகள் திணைக்களம், தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை ஆகிய நிறுவனங்களின் நிருவாக நடவடிக்கைகளை ஒருங்கிணைப்புச் செய்தல் மற்றும் வழிகாட்டுவது தொடர்பாகவும் நிருவாகப் பிரிவு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. மேற்படி நிறுவனங்களுக்கு அ.நி.சு. 6/2006 இற்கு அமைய ஆட்சேர்ப்பு ஒழுங்குவிதிகளை திருத்தியமைத்தல், பதவியணிக்கான பதவிகளை ஏற்படுத்தல், நியமனம் செய்தல், பதவி உயர்வு, பதவியணியினரின் சேவைசார் சிக்கல்கள் தொடர்பாக அமைச்சிடம் சமர்ப்பிக்கப்படுகின்ற முறைப்பாடுகள் தொடர்பாக நடவடிக்கை மேற்கொள்ளல் போன்ற பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அவ்வாறே இந்த நிறுவனங்களின் அலுவலர்களின் வெளிநாட்டு சுற்றுலாக்கள், புலமைப் பரிசில்கள், பயிற்சிப் பாடநெறிகள் போன்றவற்றுக்கு அங்கீகாரம் வழங்கல் மற்றும் உரியவாறு லீவு அங்கீகரிப்பதும் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

## V. பியகம மகளிர் செவண விடுதி

பியகம முதலீட்டு வலயத்திலுள்ள கைத்தொழில்சாலைகளில் சேவையில் ஈடுபடுகின்ற பெண்களுக்கு வதிவிட வசதிகளைப் பெற்றுக் கொடுக்கின்ற இந்த 'மகளிர் செவண' விடுதியில் பயன்படுத்தப்படாத பொருட்களை அகற்றி புதுப்பிக்கும் நடவடிக்கைகள் இந்த ஆண்டில் மேற்கொள்ளப்பட்டன. அதற்கமைய பெண்கள் சுமார் 250 பேருக்கு பாதுகாப்பான வதிவிட வதசிகள் வழங்கப்படும்.

## Vi. உற்பத்தித்திறன் மேம்படுத்தல் நடவடிக்கைகள்

வினைத்திறன்மிக்க பொதுச் சேவை மற்றும் நற்புறவான, மனங்கவர் அலுவலக வளவை ஏற்படுத்துவதற்காக அமைச்சு உற்பத்தித்திறனை மேம்படுத்தும் நடவடிக்கைகளை தொடர்ந்து மேற்கொண்டு வந்துள்ளது. மேலும் உற்பத்தித்திறன் செயலகத்தினால் நடாத்தப்படுகின்ற தேசிய உற்பத்தித்திறன் விருது வழங்கும் போட்டியிலும் கலந்துகொண்டதுடன், இதன் போது பாராட்டும் வகையிலான சான்றிதழும் வென்றெடுக்கப்பட்டது.

# கணக்குகள் பிரிவு

## பிரதான பணிகள்

01. மாதாந்த சம்பள விபரங்களைப் பெற்றுக் கொள்ளல்.
02. வங்கிக் கடனுக்குத் தேவையான சம்பள ஆவணங்களைப் பெற்றுக் கொடுத்தல்.
03. மேலதிக நேரம், பிரயாணச் செலவினம், முற்பணம் மற்றும் செலவினங்களை மீள்நிரப்புச் செய்தல் உட்பட சகல கொடுப்பனவு நடவடிக்கைகளும்.
04. இடர் கடன், உற்சவ முற்பணம், உள்ளிட்ட சகல திணைக்களக் கடன்களையும் செலுத்தல்.
05. களஞ்சியத்தைப் பேணிவருதல்.
06. செலவுத் தலைப்பு 120 இன் கீழ் அமைச்சின் ஒதுக்கீட்டுக் கணக்கைத் தயார் செய்தல்.
07. வழங்கல் நடவடிக்கைகள்.

செலவுத் தலைப்பு - 120 - சிறுவர் அபிவிருத்தி மற்றும் மகளிர் அலுவல்கள் அமைச்சின் 2014 ஆம் ஆண்டுக்கான 2014.12.01 ஆம் திகதிய 239/2014 ஆம் இலக்க அரசாங்க கணக்குகள் சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள டிஜிஎஸ்ஏ 1 மாதிரிப் படிவத்திலிருந்து 10 ஆவது மாதிரிப் படிவம் வரையான மாதிரிப்படிவங்களும், குறிப்பு (i) முதல் குறிப்பு (iv) (அ) மற்றும் (ஆ) வரையான தகவல்களின் பொழிப்புரையுடன் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆகிய உறுப்புரைகள், 2014 இன் 47 ஆம் இலக்க ஒதுக்கீட்டு (திருத்த) சட்டத்தினால் திருத்தியமைக்கப்பட்ட 2013 இன் 36 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டம் மற்றும் வேறு நியாயாதிக்க ஏற்பாடுகளுக்கும், 2015 இன் வருடாந்த வரவு செலவுத்திட்ட மதிப்பீட்டின் 2014 இன் திருத்தியமைக்கப்பட்ட வரவு செலவுத்திட்ட மதிப்பீட்டுக்கும் அமைய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதி ஒழுங்குவிதிகளின் ஏற்பாடுகளை உள்ளடக்கியதாக அரசாங்க நிதி மற்றும் நிருவாக ஒழுங்குவிதிகளுக்கு அமைவாக தயார் செய்து உரிய திகதியில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

## 2014 ஆம் ஆண்டின் நிதிசார் முன்னேற்றம்

| நிகழ்ச்சித்திட்ட இலக்கம் | நிகழ்ச்சித்திட்டத்தின் பெயர் | வரவு செலவுத்திட்ட மதிப்பீட்டை ஒதுக்கம் | நி.பி. 66 மற்றும் 69 இற்கு அமைவான மாற்றல்கள் | தேறிய ஒதுக்கம் | மொத்தச் செலவினம் |
|---|---|---|---|---|---|
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| | மீண்டெழும் | | | | |
| 1 | செயற்பாட்டு நடவடிக்கைகள் | 716,365,000 | - 410,000 | 715,955,000 | 711,898,232 |
| 2 | அபிவிருத்தி நடவடிக்கைகள் | 577,530,000 | 410,000 | 577,940,000 | 460,647,732 |
| | உபமொத்தம் (மீண்டெழும்) | 1,293,895,000 | 0 | 1,293,895,000 | 1,172,545,964 |
| | மூலதனம | | | | |
| 1 | செயற்பாட்டு நடவடிக்கைகள் | 156,700,000 | - | 156,700,000 | 128,306,195 |
| 2 | அபிவிருத்தி நடவடிக்கைகள் | 583,750,000 | - | 583,750,000 | 539,528,784 |
| | உபமொத்தம் (மூலதனம்) | 740,450,000 | - | 740,450,000 | 667,834,979 |
| | மொத்தம் | 2,034,345,000 | 0 | 2,034,345,000 | 1,840,380,943 |

## செலவினங்களை நிதியீட்டல்

| | | நிகழ்ச்சித்திட்டம் 1 | | மொத்தம் | | |
|---|---|---|---|---|---|---|
| குறியீடு | குறியீட்டு விபரம் | தேறிய ஏற்பாடு | உண்மைச் செலவினம் | தேறிய ஏற்பாடு | உண்மைச் செலவினம் | சேலவின விகிதம் |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | % |
| 11 | உள்ளூர் நிதி | 835,655,000 | 826,376,360 | 835,655,000 | 826,376,360 | 99 |
| 13 | வெளிநாட்டு உதவி - கொடை | 37,000,000 | 13,828,067 | 37,000,000 | 13,828,067 | 37 |
| | மொத்தம் | 872,655,000 | 840,204,427 | 872,655,000 | 840,204,427 | |

| | | நிகழ்ச்சித்திட்டம் 2 | | மொத்தம் | | |
|---|---|---|---|---|---|---|
| குறியீடு | குறியீட்டு விபரம் | தேறிய ஏற்பாடு | உண்மைச் செலவினம் | தேறிய ஏற்பாடு | உண்மைச் செலவினம் | சேலவின விகிதம் |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | % |
| 11 | உள்ளூர் நிதி | 1,074,115,000 | 949,104,055 | 1,074,115,000 | 949,104,055 | 88 |
| 13 | வெளிநாட்டு உதவி - கொடை | 93,075,000 | 52,278,076 | 93,075,000 | 52,278,076 | 56 |
| | மொத்தம் | 1,167,190,000 | 1,001,382,131 | 1,167,190,000 | 1,001,382,131 | |

## அரசாங்க ஊழியர்களின் முற்பண பி கணக்கு

| 2014.01.01 ஆம் திகதிக்கு ஆரம்ப மீதி | ஆண்டினுள் வரவு வைத்தல் | ஆண்டினுள் செலவு வைத்தல் | 2014.112.31 ஆம் திகதிக்கு மீதி |
|---|---|---|---|
| 53,480,611.49 | 16,690,598.00 | 15,585,893.83 | 54,585,315.66 |

## உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு

### பிரதான பணிகள்

- அமைச்சு மற்றும் அமைச்சின் கீழ் அமுல்படுத்தப்பட்ட கருத்திட்டங்களின் நிதிசார் மற்றும் தாபன நடவடிக்கைகளை கணக்காய்வு செய்வதும், அறிக்கையிடுவதும்.
- தவறுகள் மற்றும் மோசடிகளைத் தடுப்பதற்காக அமைச்சினுள் அமுல்படுத்தப்பட்டுள்ள கட்டுப்பாட்டு முறைகள் வெற்றிகரமானதாக உள்ளதா என்பது பற்றி ஆராய்தல் மற்றும் அது பற்றிய அவதானிப்புகளையும். சிபாரிசுகளையும் சமர்ப்பித்தல்.
- அமைச்சின் கணக்குகள் மற்றும் வேறு அறிக்கைகளின் நம்பகத்தன்மையை ஆராய்தல், அமைச்சின் சொத்துக்கள் சகல வகையிலுமான நட்டங்களிலிருந்தும் உச்சளவில் பாதுகாக்கப்பட்டுள்ளதா என்பதை ஆராய்ந்து பார்ப்பதும், அறிக்கையிடுவதும்.
- ஆமைச்சின் கீழுள்ள பிரிவுகளில் பின்வரும் நடவடிக்கைகள் தொடர்பான முன்னேற்றத்தை மீளாய்வு செய்வதற்காக மூன்று (03) மாதங்களுக்கு ஒரு தடவை கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்களை நடாத்தல்.
    - வருடாந்த செயற்றிட்டத்தை அமுல்படுத்துவதன் முன்னேற்றத்தை மீளாய்வு செய்தும், பலவீனமான செயலாற்றுகையைத் தவிர்த்துக் கொள்வதற்குத் தேவையான நடவடிக்கைகளைச் சமர்ப்பிப்பதும்.
    - கணக்காய்வாளரினால் வெளியிடப்படுகின்ற கணக்காய்வு வினாக்கள் / கணக்காய்வு அறிக்கைகளுக்கான பதில்களை சமர்ப்பித்தல்.
    - வருடாந்த வழங்கல் திட்டத்தை அமுல்படுத்தல்.
    - வருடாந்த அறிக்கைகள் / செயலாற்றுகை அறிக்கைகளை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தல்.
    - வருடாந்த இருப்புக் கணப்பீட்டை நடாத்தல்.
    - அபிவிருத்தி மற்றும் நிருவாக நடவடிக்கைகள்.
- அமைச்சின் கீழ் காணப்படுகின்ற நிறுவனங்களின் வருடாந்த செயற்றிட்டங்களுக்கு அமைய நடவடிக்கைகளை மேற்கொள்வதில் தாமதம் ஏற்படுவதற்குக் காரணமாகியுள்ள சிக்கல்களை கணக்காய்வு செய்வதும், அறிக்கையிடுவதும்.

### 2014 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வு விடயங்கள்

| திகதி | வினா | பிரிவு |
|---|---|---|
| 2014.01.24 | கற்கை உபகரணம் வழங்கல் | சிறுவர் செயலகம் |
| 2014.02.25 | சூழல் கடன் மற்றும் வனிதா சக்தி மன்றத்தின் நிதிகளைக் கணக்காய்வு செய்தல் | இலங்கை மகளிர் பணியகம் |
| | ஜாஎல மகளிர் சங்கத்தின் கணக்காய்வு | |
| 2014.02.28 | தேசத்திற்கு மகுடம் தேசிய அபிவிருத்திக் கண்காட்சிக் கூடத்தை வடிவமைத்தல் | கணக்குகள் பிரிவு |
| 2014.03.03 | பாதுக்க வனிதா சக்தி மன்றம் | இலங்கை மகளிர் பணியகம் |

| | | |
|---|---|---|
| 2014.03.12 | துளபாடம் உபகரணம் பற்றிய பரிசோதனை -2013 | கணக்குகள் பிரிவு |
| 2014.05.20 | 2012/2013 ஆண்டுகளில் கொள்வனவு செய்யப்பட்ட கணனி உதிரிபாகங்கள் மற்றும் அலுவலக உபகரணங்களை பதிவேடுகளில் பதிவு செய்யும் செயன்முறை பற்றிய பரிசோதனை | தாபனப் பிரிவு |
| 2014.05.28 | 2012/2013 ஆண்டுகளில் கொள்வனவு செய்யப்பட்ட கணனி உதிரிபாகங்கள் மற்றும் அலுவலக உபகரணங்களை பதிவேடுகளில் பதிவு செய்தல் மற்றும் களஞ்சியப்படுத்தும் செயன்முறை பற்றிய பரிசோதனை | |
| | தளபாடம் கொள்வனவு செய்வது பற்றிய பரிசோதனை | |
| | அமைச்சின் கொள்வனவு மற்றும் களஞ்சியப்படுத்தும் செயன்முறை பற்றிய கணக்காய்வுப் பரிசோதனை | கணக்குகள் பிரிவு |
| 2014.05.29 | ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிதியத்தினால் அமுல்படுத்தப்பட்டள்ள கருத்திட்டம் - 2013 | அபிவிருத்திப் பிரிவு |
| | வனிதா சக்தி கணக்குகளைப் பரிசோதித்தல் - இப்பாகமுவ வலயம் | இலங்கை மகளிர் பணியகம் |
| 2014.06.05 | வெலிகெபொல பி.செ.பி. வெளிக்களப் பரிசோதனை | இலங்கை மகளிர் பணியகம் |
| 2014.06.20 | சூழல் கடன் திட்டத்தை அமுல்படுத்துவதற்கான ஏற்பாடுகளைப் பெற்றுக் கொடுத்தல் | கணக்குகள் பிரிவு |
| 2014.06.24 | சூழல் கடன் திட்டம் - வெலிகெபொல பி.செ.பி. | இலங்கை மகளிர் பணியகம் |
| | வெலிகெபொல பி.செ.பி. வெளிக்களப் பரிசோதனை | |
| | முன்பள்ளிப் பருவ அபிவிருத்தி பற்றிய மாதிரிக் கிராமங்களைத் தாபித்தல் | சிறுவர் செயலகம் |
| 2014.08.22 | சியம்பலாண்டுவ பி.செ.பி. வனிதா சக்தி மன்றங்களை பரிசோதனை செய்தல். | இலங்கை மகளிர் பணியகம் |
| 2014.08.26 | கந்தளாய் பி.செ.பி. வனிதா சக்தி மன்ற கணக்குகளை பரிசோதனை செய்தல். | |
| 2014.09.01 | உள்ளகக் கணக்காய்வுப் பரிசோதனை – வங்கி இணக்கக் கூற்றுக்கள் | கணக்குகள் பிரிவு |
| 2014.10.15 | கம்பஹா பி.செ.பி. வனிதா சக்தி மன்றம் மற்றும் சூழல் கடன் திட்டத்தைப் பரிசோதனை செய்தல். | இலங்கை மகளிர் பணியகம் |
| 2014.10.27 | கம்பஹா பி.செ.பி. வெலிவேரிய வனிதா சக்தி மன்ற கணக்குகளை பரிசோதனை செய்தல். | இலங்கை மகளிர் பணியகம் |
| 2014.10.28 | கட்டுநிதி முற்பணம் தீர்க்கப்படாமை | கணக்குகள் பிரிவு |
| 2014.10.30 | பாதுக்க பி.செ.பி. வனிதா சக்தி மன்றம் தொடர்பாக சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையின் முன்னேற்றத்தை அறிக்கையிடல். | இலங்கை மகளிர் பணியகம் |
| | முன்பள்ளிப் பருவ அபிவிருத்தி நிலையங்களின் பாலர் பாடசாலை மாணவர்களுக்கு ஒது கிளாஸ் பசும் பால் வழங்கும் நிகழ்ச்சித்திட்டம் - 2014 | சிறுவர் செயலகம் |
| 2014.11.13 | வனிதா சக்தி மன்றங்களின் தற்போதைய நிலைமையை பரிசோதித்தல் | இலங்கை மகளிர் பணியகம் |
| 2014.12.09 | 700 மில்லியன் ரூபா கருத்திட்டம் - கொழும்பு மாவட்டம் | நன்னடத்தை, சிறுவர் பராமரிப்புச் சேவைகள் திணைக்களம் |
| 2014.12.29 | சிறுவர் துஷ்பிரயோகம் மற்றும் பெண்களுக்கு எதிரான துன்புறுத்தல்களைத் தடுப்பதற்கான 700 மி.ரூ. நிகழ்ச்சித்திட்டம் - அநுராதபுரம் மாவட்டம் | |
| 2014.12.31 | அநுராதபுரம் மாவட்ட பி.செ.பி. வனிதா சக்தி மன்றங்களைப் பரிசோதனை செய்தல் | இலங்கை மகளிர் பணியகம் |
| | அநுராதபுரம் மாவட்ட பி.செ.பி. சூழல் கடன் திட்டத்தைப் பரிசோதனை செய்தல் | |

# திட்டமிடல் பிரிவு

## பிரதான செயற்பணிகள்

01. அமைச்சின் அனைத்துப் பிரிவுகள் மற்றும் திணைக்களங்களையும் ஒருங்கிணைப்புச் செய்து அடுத்தகட்டத் திட்டங்களைத் தயார் செய்தல்.
02. அமைச்சின் அனைத்துப் பிரிவுகள் மற்றும் திணைக்களங்களையும் ஒருங்கிணைப்புச் செய்து முன்னேற்ற அறிக்கைகளைத் தயார் செய்தல்.
03. திட்டமிடல் பிரிவு சம்பந்தமான ஊடக நடவடிக்கைகளை ஊடகப் பிரிவுடன் இணைந்து மேற்கொள்ளல், தகவல்களைப் பகிந்தளித்தல் மற்றும் ஒருங்கிணைப்பு.
04. அரச சார்பற்ற அமைப்புக்கள் (NGOமற்றும் INGO'S) அமைப்புக்களுடன் நடாத்தப்படுகின்ற நிகழ்ச்சித்திட்டங்களை ஒருங்கிணைப்புச் செய்வதும் முன்னேற்றத்தை அறிக்கையிடுவதும்.
05. அமைச்சைப் பிரதிநிதித்துவம் செய்து முன்னேற்ற மீளாய்வுக் கூட்டங்கள் மற்றும் அறிவுறுத்தல் நிகழ்ச்சித்திட்டங்களாக நடாத்தப்படுகின்ற பல்வேறு வைபவங்களை ஒழுங்கு செய்வதும், அவற்றை வெற்றிகரமாக்கிக் கொள்வதும்.
06. பல்வேறு சமூக உபசரணைச் சேவைகளுக்குப் பங்களிப்பைப் பெற்றுக்கொடுத்தல்.
07. அமைச்சின் கீழ் அமுல்படுத்தப்பட்டுள்ள அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள், செயற்பாடுகள் மற்றும் பின்னாய்வு நடவடிக்கைகளை மேற்கொள்ளல் (தேசிய/மாவட்ட/பிரதேச மட்டத்திலான பெண்கள் மற்றும் சிறுவர் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள்).
08. திட்டமிடல் பிரிவு சம்பந்தமான அடிப்படை விடய ரீதியான தகவல்களைச் சேகரிப்பதும் இற்றைப்படுத்துவதும்.
09. ஆராய்ச்சி நிறுவனங்களுக்கு முன்னேற்ற அறிக்கைகளையும் திட்டங்களையும் பெற்றுக்கொடுத்தல்.
10. அமைச்சின் தேவைகளுக்கேற்றவாறு பல்வேறு விசேட விடயங்களின் கீழ் வெளிக்களப் பதவியணியினருக்கான பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை ஒழுங்கு செய்தல்.

## 2014 ஆம் ஆண்டின் செயற்பாடுகள்

| செயற்பாடுகள் | முன்னேற்றம் |
|---|---|
| 01. திட்டங்களைத் தயார் செய்தல். | |
| *வருடாந்த செயற்றிட்டத்தைத் தயார் செய்தல். | திட்டம் 01 |
| *தேசத்துக்கு மகுடம் தேசிய அபிவிருத்தித் திட்டத்தைத் தயார் செய்தல். | திட்டம் 01 |
| * LLRC திட்டத்தைத் தயார் செய்தல் | திட்டம் 01 |
| * தேசிய போசாக்கு செயற்றிட்டம் - இதன் செயல்ரீதியான திட்டத்தைத் தயார் செய்தல் | திட்டம் 01 |
| *சிறுவர் துஷ்பிரயோகம் மற்றும் பெண்களுக்கு எதிரான துன்புறுத்தல்களை தடுப்பதற்கான விசேட செயற்றிட்டத்தைத் தயார் செய்தல் | திட்டம் 01 |

| | |
|---|---|
| *மாவட்ட திட்டங்களைத் தயாா் செய்தல்.<br><br>02. செயற்பாடு மற்றும் முன்னேற்ற மீளாய்வு<br>*மாதாந்த முன்னேற்ற அறிக்கைகளைத் தயாா் செய்தல்<br>* காலாண்டு முன்னேற்ற அறிக்கைகளைத் தயாா் செய்தல்<br>*LLRC முன்னேற்ற அறிக்கைகளைத் தயாா் செய்தல்<br>* மாவட்ட முன்னேற்ற அறிக்கைகளைத் தயாா் செய்தல்<br>*முன்னேற்ற மீளாய்வுக் கூட்டங்கள் (தேசிய மட்டம்)<br>*வருடாந்த முன்னேற்ற அறிக்கைகளைத் தயாா் செய்தல்<br>03. இணையத்தளங்களைப் பேணிவருவதும், இற்றைப்படுத்துவதும்<br>04. நிகழ்ச்சித்திட்டங்களின் மதிப்பீடு<br>05. விசேட நிகழ்ச்சித்திட்டங்கள்<br>பல்வேறு துறைகளின் கீழ் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை தேசிய மற்றும் வெளிக்கள மட்ட அலுவலா்களுக்காக நடாத்தல்.<br>(அனா்த்த முகாமைத்துவம், முதலுதவிப் பயிற்சி, சுகாதார முகாம்கள், சுகாதாரமும், போசாக்கும், சிறுவா் மற்றும் மகளிா் துறை அலுவலா்களுக்கு ஓடிசம் பற்றி அறிவுறுத்தல், முன்பள்ளிப் பருவ பிள்ளைகளின் போசாக்கு பற்றி வெளிக்கள அலுவலா்களது வதிவிடப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் போன்றன<br>06. பல்வேறு வெளியீடுகளை வெளியிடுவதும் தகவல்களை வெளியிடுவதும். | முன்னேற்ற அறிக்கைகள், மென்பிரதிகள் 12<br>முன்னேற்ற அறிக்கைகள் 04<br>முன்னேற்ற அறிக்கைகள் 12<br>முன்னேற்ற அறிக்கைகள் 04<br>கூட்டங்கள் 04<br><br>முன்னேற்ற அறிக்கைப் புத்தகங்கள் மற்றும் குறுவட்டுகளைத் தயாா் செய்தல்<br><br>மதிப்பீட்டு அறிக்கைகள் 04<br><br>நிகழ்ச்சித்திட்டங்கள் 04<br><br>நிகழ்ச்சித்திட்டங்கள் 09 |





# அபிவிருத்திப் பிரிவு

## பிரதான செயற்பணிகள்

சிறுவர்கள் மற்றும் பெண்களின் உரிமைகளையும், அபிவிருத்தியையும் உறுதி செய்கின்ற உணர்வுப்பூர்வமான சமூகமொன்றை உருவாக்கும் நோக்கத்துடன், அமைச்சின் அனைத்துப் பிரிவுகளினாலும், நிறுவனங்களினாலும் அமுல்படுத்தப்படுகின்ற அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் தொடர்பான கொள்கைகளை வகுத்தல், மேற்படி நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்தல், ஐக்கிய நாடுகளின் அனுசரணை நிறுவனங்கள் மற்றும் அரசார்பற்ற அமைப்புக்களுக்குரிய கருத்திட்டங்களை அமுல்படுத்தல்.

இந்த ஆண்டில் திறிய காந்தா நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் ரூபா 33,000,000 வரவு செலவுத்திட்ட மதிப்பீடு ஒதுக்கப்பட்டதுடன், ஆண்டின் இறுதியில் நிதிசார் முன்னேற்றம் ரூபா 32,436,096 ஆகும். அதற்கமைய 98% ஆன நிதிசார் முன்னேற்றம் அடையப்பெற்றுள்ளது.

| நிகழ்ச்சித்திட்டம் | நிதிசார் இலக்கு ரூபா | நிதிசார் முன்னேற்றம் ரூபா | பௌதீக முன்னேற்றம் |
|---|---|---|---|
| திறிய காந்தா நிகழ்ச்சித்திட்டம் (120-01-02-2502(4) | 33,000,000 | 32,436,096 | விதவைகள் மற்றும் வீட்டுத் தலைவிளாக பெண்கள் உள்ள குடும்பங்களை அபிவிருத்தி செய்யும் கருத்திட்டத்தின் கீழ் கேகாலை, புத்தளம், குருநாகல் ஆகிய மாவட்டங்களில் குறைந்த வருமானம் பெறுகின்ற விதவைகளின் குடும்பங்களச் சேர்ந்த பிள்ளைகள் 1452 பேருக்கு பாடசாலை உபகரணங்களை வழங்கியமையும், வெண்ணப்புவை, நாத்தாண்டிய, தங்கொட்டுவ, மஹவெவ, மாதம்பே, ஆரச்சிகட்டுவ, சிலாபம், மூந்தலம, பல்லம, மஹகும்புக்கடவல, கல்பிட்டி, கருவலகஸ்வெவ, புத்தளம், வனாதவில்லுவ, நவகத்தேகம, ஆனமடுவ ஆகிய பிரதேச செயலாளர் பிரிவுகளில் விதவைகள் மற்றும் வீட்டுத் தலைவிகளாக உள்ள பெண்கள் 301 பேருக்கு சுயதொழில்வாய்ப்புக்கான உதவிகள் வழங்கப்பட்டமையும் மேற்கொள்ளப்பட்டன. செலவிடப்பட்ட தொகை 9.3009 மி.ரூ. ஆகும். |
| | | | சர்வதேச மகளிர் தின தேசிய வைபவம் அவளின் சக்தி தேசத்தின் சக்தியாகும்" என்ற தொணிப்பொருளின் கீழ் கொழும்பு ஆனந்தாக் கல்லூரியின் குலரத்ன மண்டபத்தில் கொண்டாடப்பட்டதுடன், அதனை முன்னிட்டு பிரதேச அடிப்படையிலான நிகழ்வுகளும் ஒழுங்கு செய்யப்பட்டன. இதற்காக 4.90 மி.ரூ. செலவிடப்பட்டது. |
| | | | மாவட்ட மற்றும் பிரதேச செயலகங்களில் சிறுவர் மற்றும் மகளிர் அபிவிருத்தி அலகுகள் 29 பிரதேச செயலகங்களில் தாபிக்கப்பட்டமையும், சிறுவர் மற்றும் மகளிர் மைய அலுவலர்களின் ஒருங்கிணைப்புடன் 38 அமைச்சுக்களில், சேவை நிலையங்களில் இடம்பெறுகின்ற துன்புறுத்தல்களை குறைப்பதற்கான நிகழ்ச்சித்திட்டங்களும் இந்த ஆண்டில் அமுல்படுத்தப்பட்டன. இதற்காக 11.950 மி.ரூ. செலவிடப்பட்டது. |

| | | | |
|---|---|---|---|
| | | | பெண்கள் தொடர்பாக முறையான தகவல் கட்டமைப்பொன்றைத் தாபிப்பதற்காக அமைச்சினுள் தகவல் தொழில்நுட்பப் பிரிவின் அபிவிருத்தி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டமையும், பிரதேச மட்டத்தில் அமுல்படுத்தப்படுகின்ற அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களைக் கண்காணிப்புச் செய்வதும், அமைச்சின் செயற்பணி தொடர்பாக சமுதாயத்தை அறிவுறுத்துவதற்காக ஊடக மற்றும் பிரச்சார நடவடிக்கைகளை மேற்கொள்ளவுமென 6.3003 மி.ரூ. செலவிடப்பட்டது. |

# இலங்கை மகளிர் பணியகம்

## நோக்கு

இலங்கை சனசமூகத்துக்கு மதிநுட்பமுடைய உணர்வுபூர்வமான நம்பிக்கைமிக்க பெண்கள் சமுதாயத்தை உருவாக்கும் தேசிய நிறுவனமாக மாறுதல்

## செயற்பணி

தமது அறிவையும் பலத்தையும் உச்சளவிலும் நல்ல முறையிலும் பயன்படுத்தி சுயபலத்தின் மூலம் சவால்களை எதிர்கொள்கின்ற இலங்கை பெண்கள் சமுதாயத்திற்கு உகந்த சூழலை உருவாக்குவதற்கு முறையான ஒழுங்கமைப்பு சட்டகத்தின் ஊடாக திட்டமிடப்பட்ட அறிவைப் பெற்றுக்கொடுத்து மேற்கொள்ளப்படுகின்ற சமூக, பொருளாதார வலுவூட்டல்களின் ஊடாக அரசாங்க கொள்கைகளுக்கு அமைய பெண்களின் அபிவிருத்திக்காக செயற்படுகின்ற தேசிய பொறிமுறையாக மாற்றமடைதல்.

## நோக்கங்கள்

01. பொருளாதார, சமூக, அரசியல் மற்றும் கலாசாரம் போன்ற துறைகளில் இலங்கை பெண்களுக்குச் சமமான உரிமைகளை அனுபவிப்பதற்கான வாய்ப்புக்களைச் செய்து கொடுத்தல்.
02. பெண்களாக உள்ளதன் காரணமாக பல்வேறு துறைகளிலும் தற்போது எதிர்நோக்கி வருகின்ற தடைகளை நீக்குவதற்காக அவர்களை வலுவூட்டல்.
03. பெண்களுக்குச் சமமான உரிமைகள் மற்றும் சமவாய்ப்புக்களை உறுதி செய்ய வேண்டிய துறைகளை இனங்காணல், அதற்குத் தேவையான அரசாங்க கொள்கைகளைத் தயார் செய்வதற்கு ஒத்துழைப்பு வழங்குதல் மற்றும் அதற்கான பல்வேறு நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்தல்.

## பிரதான செயற்பணிகள்

1. இலங்கைப் பெண்களை பொருளாதார ரீதியாகவும் சமூக ரீதியாகவும் வலுவூட்டுவதற்காக பொருத்தமான நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் கருத்திட்டங்களை இனங்காணல், திட்டமிடல், அமுல்படுத்தல் மற்றும் மதிப்பீடு செய்தல்.
2. சகல வயதுப் பிரிவுகளையும் சேர்ந்த பெண்களின் விசேட அம்சங்களை இனங்கண்டு அவர்களுக்கு உகந்தவாறு நாட்டின் ஒட்டுமொத்த அபிவிருத்தியின் பங்காளர்களாக மாற்றுவதற்குரிய நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்தல்.
3. பெண்களாக இருப்பதனால் அவர்கள் எதிர்நோக்குகின்ற சமூக அசௌகரியங்களைத் தவிர்ப்பதற்கான நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்தல்.
4. சமூகத்தில் விசேட காரணங்களினால் பல்வேறு பாதிப்புக்களை எதிர்நோக்கியுள்ள பெண்களுக்கான விசேட நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்தல்.
5. ஒட்டுமொத்த பெண்கள் சமுதாயத்தினதும் அறிவு, திறமை மற்றும் கருத்துக்களை மேம்படுத்துவதற்கான நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்தல்.
6. பெண்களுக்கு ஒரே அமைப்பின் கீழ் செயற்படுவதற்காக சமுதாய அடிப்படையிலான மட்டத்திலிருந்து தேசிய மட்டம் வரை பெண்களை ஒரே வலையமைப்பின் கீழ் ஒழுங்குபடுத்தல்.

## திரண்ட நிதிசார் முன்னேற்றத்துக்கு அமைய பௌதீக முன்னேற்றம்

2014 ஆம் ஆண்டில் ரூபா 30,000,000 ஆன வரவு செலவுத்திட்ட மதிப்பீடு ஒதுக்கப்பட்டதுடன், மொத்தச் செலவினம் ரூபா 29,859,624 ஆகும். அதற்கமைய மொத்த ஒதுக்கங்களில் 99% ஆன தேறிய நிதிசார் முன்னேற்றத்தை அடைந்து கொள்ள முடிந்தது.

## காந்த சவிய நிகழ்ச்சித்திட்டம் (120-02-03-6-2502)-11

| செயற்பாடு | நிதிசார் இலக்கு ரூபா | நிதிசார் முன்னேற்றம் ரூபா | பௌதீக முன்னேற்றம் |
|---|---|---|---|
| பெண்களை பொருளாதார ரீதியாக வலுவூட்டல் | 17.300 | 16.6026 | 33 பிரதேச செயலாளர் பிரிவுகளில் குறைந்த வருமானம் பெறுகின்ற விதவைகள் மற்றும் வீட்டுத் தலைவிகளான பெண்கள் 530 பேரை இனங்கண்டு அவர்களின் மாதாந்த வருமானத்தை மேம்படுத்துவதற்காக சுயதொழில் வாய்ப்புக்களை ஆரம்பிக்க உதவி வழங்கியமையும், பயிற்றுவித்தமையும். இதற்கென 7.7445 மி.ரூ. செலவிடப்பட்டுள்ளது. |
| | | | கால்நடை வளர்ப்பு மூலம் தமது குடும்பத்தின் போசாக்கு மற்றும் மேலதிக உற்பத்திகளையும், உப உற்பத்திகளையும் சந்தைக்கு வழங்கி மேலதிக வருமானத்தை வளர்ப்பதையும் நோக்காகக் கொண்டு 10 பிரதேச செயலாளர் பிரிவுகளில் பயனாளிகள் 157 பேருக்காக இந்த நிகழ்ச்சித்திட்டம் அமுல்படுத்தப்பட்டது. இதற்கென 1.451 மி.ரூ. செலவிடப்பட்டுள்ளது. |

| | | | |
|---|---|---|---|
| | | | மகளிர் அமைப்புக்களின் அங்கத்தவர்களை வருமான உருவாக்க நடவடிக்கைகளில் ஈடுபடுத்துவதும், சூழல் கடன் திட்டத்தை அமுல்படுத்தல, முகாமைத்துவ தொழில்முயற்சிசார் மற்றும் கணக்கு நடவடிக்கைகள் பற்றிய அறிவைப் பெற்றுக் கொடுப்பதையும் நோக்காகக் கொண்டு சூழல் கடன் நிகழ்ச்சித்திட்டம் மற்றும் வருமான உருவாக்க வழிகளுக்கு ஊக்குவிக்கும் நிகழ்ச்சித்திட்டத்தை 40 பிரதேச செயலாளர் பிரிவுகளில் பயனாளிகள் 2020 பேருக்காக நடாத்தியமை. இதற்கென 2.446 மி.ரூ. செலவிடப்பட்டுள்ளது. |
| | | | மகளிர் அமைப்புக்களின் அங்கத்தவர்களை சேமிப்புக்கு தூண்டுவதற்காக ஏற்படுத்தப்பட்டுள்ள வனிதா சக்தி வங்கிகளின் பதவியணியினரை பயிற்றுவித்தல், கண்காணிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளல் போன்றன இந்த ஆண்டு மேற்கொள்ளப்பட்டது. 23 வங்கிகள் கண்காணிப்புச் செய்யப்பட்டுள்ளதுடன், 0.1423 மி.ரூ. செலவிடப்பட்டுள்ளது. |
| | | | வெளிநாடு செல்ல உத்தேசித்துள்ள பெண்கள் வெளிநாடு செல்வதன் காரணமாக உருவாகின்ற பாதகமான பெறுபேறுகள், வெளிநாடு செல்வதற்குப் பதிலாக உள்நாட்டிலேயே தொழில் வாய்ப்புக்களை அறிமுகம் செய்தல் மற்றும் இதற்கு பெண்களை ஊக்குவிப்பதற்கான நிகழ்ச்சித்திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டன. இதற்காக 1.9572 மி.ரூ. செலவிடப்பட்டுள்ளது. இது 13 பிரதேச செயலாளர் பிரிவுகளில் அமுல்படுத்தப்பட்டது. |
| | | | கடற்றொழிலாளர்களான பெண்களின் அமைப்புக்களைச் சேர்ந்த அங்கத்தவர்களது பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்காக திறிய தேத்தட்ட சவிய எனும் கடற்றொழில் மகளிர் நிகழ்ச்சித்திட்டம் 8 பிரதேச செயலாளர் பிரிவுகளில் அமுல்படுத்தப்பட்டது. இதன் போது கடற்றொழிலுக்குத் தேவையான உபகரணங்களை, உள்நாட்டு மூலப் பொருட்களைப் பயன்படுத்தி உற்பத்தி செய்யும் நோக்கத்துடன், 0.9360 மி.ரூ. செலவிடப்பட்டுள்ளது. |
| பெண்களை சமூக ரீதியாக வலுவூட்டல் | 8.3 | 8.6213 | இலங்கைப் பெண்களின் உரிமைகளைப் பாதுகாத்தல் மற்றும் அடையச் செய்யத் தேவையான வசதிகளைச் செய்து கொடுப்பது இதன் போது இடம்பெறுகின்றது. இதன் கீழ்,<br><br>01. அரவைணப்பு நிலையம்<br>சட்டவிரோத ஆட்கடத்தலுக்கு ஆளான உள்நாட்டு, வெளிநாட்டு பாதிக்கப்பட்ட பெண்கள் மற்றும் அவர்களின் பிள்ளைகள் சம்பந்தமான சிக்கல்களைத் தீர்த்து வைக்கும் வரை பாதுகாப்பாக தடுத்து வைத்தல், அவர்களுக்கு அரவணைப்பைப் பெற்றுக் கொடுத்தல், ஆலோசனை, சட்ட நடவடிக்கைகளுக்கான வசதிகளைச் செய்தல், சுகாதார வசதிகள் மற்றும் அவர்களின் அடிப்படைத் தேவைகளைப் பெற்றுக் கொடுத்தல். (உணவு, உடை) |

| | | | |
|---|---|---|---|
| | | | 02 அரவணைப்பு நிலையங்கள் பேணிவரப்படுவதுடன், 2014 ஆம் ஆண்டில் பயனாளிகள் 60 பேருக்காக 0.3188 மி.ரூ. செலவிடப்பட்டுள்ளது.<br><br>02. ஆலோசனை நிகழ்ச்சித்திட்டங்களும், ஆலோசனை நிலையங்களும்<br><br>பாதிக்கப்பட்ட பெண்கள் மற்றும் சிறுவர்களுக்கு உளவியல் ஆலோசனைகளைப் பெற்றுக் கொடுத்து அவர்களை சேவைகளைப் பெற்றுக் கொள்ளத்தக்க ஆட்கள் மற்றும் நிறுவனங்களிடம் அனுப்பிவைப்பதும், வாழ்க்கையில் எழுகின்ற சிக்கல்களைத் தீர்த்துக் கொள்வதற்கான உளவியல் முறைகளைப் பயன்படுத்திக் கொள்வதற்கு பழக்கப்படுத்துவதற்குமாக 12 ஆலோசனை நிலையங்கள் ஆலோசனை அலுவலர்களின் கீழ் பேணிவரப்படுவதுடன், அதற்கு மேலதிகமாக பிரதேச செயலகங்களில் ஆலோசனை உதவி அலுவலர்கள் 275 பேர் இணைப்புச் செய்யப்பட்டுள்ளார்கள். 2014 ஆம் ஆண்டில் 745 பேருக்கு உளவியல் ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. மேலும் பிரதேச செயலாளர் பிரிவுகள் 48 இன் பயனாளிகள் 7084 பேருக்கு ஆலோசனை செயலமர்வுகளும் நடாத்தப்பட்டதுடன், இதற்கென 0.9978 மி.ரூ. செலவிடப்பட்டது.<br><br>03. சமூக, பொருளாதார மற்றும் கலாசார ரீதியாக தோட்டப்புற பெண்களின் நிலைமையை மேம்படுத்துவதற்காக கற்ற பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் சிபாரிசுகளை அமுல்படுத்தி போசாக்கினை மேம்படுத்தல், போதைவஸ்துப் பாவனையை ஒழித்தல், வெளிநாடு செல்லும் தோட்டப்புற பெண்களை மாற்று வருமான வழிமுறைகளுக்கு தூண்டுதல், கல்வி, ஆட்கடத்தலையும், துன்புறுத்தலையும் குறைப்பதற்காக தோட்டப்புற மக்கள் வாழும் 56 பிரதேச செயலாளர் பிரிவுகளில் பயனாளிகள் 5311 பேருக்காக நிகழ்ச்சிதிட்டங்கள் நடாத்தப்பட்டன. இதற்கென 1.9896 மி.ரூ. செலவிடப்பட்டது.<br><br>04. இளம்பருவ பெண்பிள்ளைகளின் திறமைகளையும், அறிவையும் வளர்ப்பதற்காக 53 பிரதேச செயலாளர் பிரிவுகளில் இளம் பருவ பெண் பிள்ளைகள் 7990 பேரை தொடர்புபடுத்திக் கொண்டு நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டுள்ளன. இதற்கென 1.9623 மி.ரூ. செலவிடப்பட்டது.<br><br>05. பெண்களின் உரிமைகளைப் பாதுகாத்தல் மற்றும் அவர்களின் அபிவிருத்திக்காக |

| | | | |
|---|---|---|---|
| | | | குழவொன்றாக செயற்படுவதற்கான அமைப்புக்களின் வலையமைப்பை உருவாக்குவதும், அவர்களின் தலைமைத்துவத்துக்கு பயிற்சி அளிப்பதற்காக தாபிக்கப்பட்டுள்ள கிராமிய மட்டத்திலான மகளிர் அமைப்புக்கள், பிரதேச ரீதியான அமைப்புக்கள் மற்றும் மாவட்ட மட்டத்திலான பெண்கள் அமைப்புக்களை வலுவூட்டல், உட்கட்டமைப்பு வசதிகள் உள்ளிட்ட சேவைகளைப் பெற்றுக் கொடுத்தல். இதற்கென 1.8209 மி.ரூ. செலவிடப்பட்டது.<br><br>06. சிறு தவறுகளுக்காக சிறையில் அடைக்கப்பட்டுள்ள பெண்கள் மீண்டும் மீண்டும் அதே தவறுகளில் ஈடுபடுவதைத் தடுத்து சமூகமயப்படுத்துவதற்காக யாழ்ப்பாணம், கண்டி, களுத்துறை, காலி, பொலன்னறுவை, வெலிகட, நீர்கொழும்பு, அநுராதபுரம் ஆகிய சிறைச்சாலைகளில் பயனாளிகள் 380 பேருக்கான 08 நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டன. இதற்கென 0.2967 மி.ரூ. செலவிடப்பட்டது. |
| வேறு நிகழ்ச்சித்திட்டங்கள் | 4.1 | 2.92515 | ஊடகங்கள் மற்றும் நூலகங்களைப் பேணிவருதல், அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களின் முன்னேற்ற மீளாய்வு நடவடிக்கைகள், பின்னாய்வு நடவடிக்கைகள், சர்வதேச மகளிர் தின தேசிய வைபவ நிகழ்வின் நடவடிக்கைகள் மற்றும் அதனை முன்னிட்டு பிரதேச மட்டத்திலான நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்தல், சர்வதேச சிறுமியர் தினம், தேசத்திற்கு மகுடம் நிகழ்ச்சித்திட்டத்தை முன்னிட்டு ஒழுங்கு செய்யும் நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் அலுவலர்களின் ஆற்றல்களை அபிவிருத்தி செய்யும் நிகழ்ச்சித்திட்டங்கள் போன்றன இதன் கீழ் நடாத்தப்பட்டன. |

# தேசிய மகளிர் குழு

## நோக்கு

பால்நிலைசார் சமஅந்தஸ்து உறுதி செய்யப்பட்டதும், வன்முறையற்றதுமான பெண்களுக்கு உகந்த ஏற்றதொரு இலங்கைச் சமூகம்

## செயற்பணி

இலங்கை பெண்களின் உரிமைகளை பாதுகாத்து மேம்படுத்தல், சமஅந்தஸ்தை உறுதிசெய்தல் மற்றும் பூரண அபிவிருத்திக்கு வழிவகுக்கின்ற கொள்கைகள், சட்டக் கட்டமைப்புக்களை தயார் செய்வதற்கான சிபாரிசுகள் மற்றும் உதவிகளைப் பெற்றுக்கொடுப்பதும் முறையாக அமுல்படுத்த ஊக்குவிப்பதும், கண்காணிப்புச் செய்து மதிப்பீடு செய்வதுமாகும்.

## பிரதான செயற்பணிகள்

- பால்நிலைசார் அடிப்படையில் ஏற்படுகின்ற மாற்றங்கள், வித்தியாசங்கள் தொடர்பான முறைப்பாடுகளை பொறுப்பேற்றல், அவதானித்தல் மற்றும் அது சம்பந்தமாக நிர்வாக, அதிகாரிகள் மற்றும் சம்பந்தப்பட்ட அலுவலர்கள் அல்லது சபைகளுக்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக அவற்றை சமர்ப்பித்தல்.

- பெண்களின் பிரகடனத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள ஏற்பாடுகளை மீறுவது தொடர்பாக கிடைக்கின்ற முறைப்பாடுகள், நிவாரணங்கள், சட்ட உதவிகள் அல்லது இணக்கம் செய்கின்ற சேவைகளுக்காக அரசாங்க அல்லது அரசசார்பற்ற அமைப்புகளிடம் சமர்ப்பித்தல்.

- இந்த செயற்பாடுகளை ஆய்வுசெய்தல், குறித்த நிர்வாக அதிகாரிகளிடமிருந்து வருடாந்த முன்னேற்ற அறிக்கைகளை பெற்றுக் கொள்ளல் மற்றும் அந்த அறிக்கைகளை நாட்டுக்குள் பிரபல்யப்படுத்தல் போன்றவற்றுக்கான வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுத்தல்.

- பிரகடனத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள பெண்களின் உரிமைகள் மற்றும் பொறுப்புக்கள் விடயத்தில் சட்ட ரீதியான மற்றும் அபிவிருத்திக் கொள்கைகளினால் ஏற்படுகின்ற அழுத்தங்கள், தாக்கங்களை மதிப்பீடு செய்தல்.

- சம்பந்தப்பட்ட ஆராய்ச்சிகளை ஊக்குவிப்பதன் மூலம் பிரகடனத்தின் நோக்கங்களை நிறைவு செய்து கொள்ள உதவுவதும் அந்த ஆராய்ச்சிகளை அடிப்படையாகக் கொண்டு மீள திருத்தியமைப்பதற்கான சிபாரிசுகளை சமர்ப்பித்தலும்.

- பெண்களின் அந்தஸ்து தொடர்பாக விடயப்பொறுப்பு அமைச்சரினால் குழுவின் கவனத்துக்கு கொண்டுவரப்படுகின்ற விடயங்கள் தொடர்பாக அல்லது பொருத்தமானதென குழு சிந்திக்கின்றவாறு செயற்படுவதற்கு அறிவுரை வழங்குதல்.

## 2014 ஆம் ஆண்டு அமுல்படுத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள்

1. பெண்களுக்கு எதிராக இடம்பெறுகின்ற துன்புறுத்தல்களை தடுப்பதற்காக பொலிஸ் சிறுவர் மற்றும் மகளிர் துஷ்பிரயோக ஒழிப்புப் பணியக அலுவலர்களை அறிவுறுத்தல்.
2. கற்ற பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் சிபாரிசுகளுக்கு அமைய இந்திய வம்சாவளி தோட்டப்புற சமுதாயத்தின் சமூகப் பாதுகாப்பை மேம்படுத்துவதற்காக தோட்ட முகாமையாளர்கள் மற்றும் சம்பந்தப்பட்ட அலுவலர்களை உணர்வுப்பூர்வமானவர்களாக மாற்றியமைக்கு நோக்கத்துடன் பால்நிலைசார் அந்தஸ்து பற்றிய நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்தல்.
3. கற்ற பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் சிபாரிசுகளை அமுல்படுத்துவது தொடர்பாக பாதுகாப்புப் படையின் தத்துவமளிக்கப்பட்ட முப்படை அலுவலர்கள் மற்றும் பொலிஸ் அலுவலர்களுக்கான கருத்தரங்கு.

4. பெண்களுக்கு எதிரான துன்புறுத்தல்களை தடுக்கும் குறிக்கோளுடன் சேவை நிலையங்களில் இடம்பெறுகின்ற வன்முறைகளைத் தடுக்கும் நோக்கத்துடன் கைத்தொழில் துறையில் சேவையில் ஈடுபட்டுள்ள பெண்களை அடிப்படையாகக் கொண்டு நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்தல்.
5. பெண்களுக்கு இடம்பெறுகின்ற துன்புறுத்தல்களை தடுப்பதற்கான நடமாடும் நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்தல்.
6. சிறுவயதில் கர்ப்பமடைவதை ஒழிப்பதற்கான நிகழ்ச்சித்திட்டங்கள்.
7. பெண்களுக்கு எதிரான துன்புறுத்தல்களை தடுப்பது பற்றிய 16 நாள் நிகழ்ச்சித்திட்டத்தை அமுல்படுத்தல்.
8. அரசியல் துறையில் பெண்களின் பிரதிநிதித்துவத்தை அதிகரிப்பதற்காக சமுதாயத் தலைவிகளுக்கான ஒரு வருட டிப்ளோமா பாடநெறியை சிங்களம் மற்றும் தமிழ் மொழி மூலம் நடாத்தல்.
9. 1938 பெண்கள் உதவி தொலைபேசி சேவையை வலுவூட்டல்.

# சிறுவர் செயலகம்

## நோக்கு

உடல், உளவியல் சமூக மற்றும் அறிவாற்றல் அபிவிருத்தியைக் கொண்ட இலங்கை சமூகமொன்றை உருவாக்குதல்


## செயற்பணி

தேசிய மட்டத்திலான கேந்திர நிறுவனம் என்ற வகையில் கொள்கைகள், நிகழ்ச்சித் திட்டங்களை வகுத்தல், அமுல்படுத்தல், மதிப்பீடு செய்தல், பின்னாய்வின் ஊடாக இலங்கையின் சிறுவர்களின் ஒட்டுமொத்த அபிவிருத்தியை உறுதிசெய்தல்.

### பிரதான செயற்பணிகள்

- முன்பள்ளிப் பருவ அரவணைப்பு மற்றும் அபிவிருத்தி பற்றிய தேசிய கொள்கையை தயார்செய்தல், அமுல்படுத்தும் பொறிமுறையாக செயற்படுதல்.
- அரச, அரச சார்பற்ற அமைப்புக்கள் மற்றும் தனியார் துறையின் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களை ஒருங்கிணைப்புச் செய்வதும், வலையமைப்புச் செய்வதும்
- முன்பள்ளிப் பருவ உபசரணை, அபிவிருத்தி தொடர்பான ஆராய்ச்சிகளை மேற்கொள்ளல், தரவுகளை சேகரித்தல் மற்றும் நிகழ்ச்சித் திட்டங்களை ஒழுங்கு செய்தல்
- முன்பள்ளிப் பருவ சிறுவர்களின் ஒட்டுமொத்த அபிவிருத்தி தொடர்பில் ஏற்புடையதாகின்ற பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை தயார் செய்வதும், அமுல்படுத்துவதும்.
- முன்பள்ளிப் பருவத்தின் முக்கியத்துவம் பற்றி மக்களை அறிவுறுத்துவதும், அவர்கள் மத்தியில் இது தொடர்பில் உணர்வுப்பூர்வமான தன்மையை ஏற்படுத்துவதும்.






## திரண்ட நிதிசார் முன்னேற்றத்துக்கு அமைய பௌதீக முன்னேற்றம்

2014 ஆம் ஆண்டில் 'கெகுலு உதானய' எனும் விடயத்தின் கீழ் ரூபா 23,000,000 ஆன வரவு செலவுத்திட்ட மதிப்பீடு ஒதுக்கப்பட்டதுடன், ரூபா 21,110,109 ஆன நிதிசார் முன்னேற்றம் அடையப் பெற்றுள்ளது. 'முன்பள்ளிப்பருவ அரவணைப்பு' எனும் விடயத்தின் கீழ் ரூபா 22,000,000 ஆன வரவு செலவுத்திட்ட மதிப்பீடு ஒதுக்கப்பட்டதுடன், ரூபா 17,904,892 ஆன நிதிசார் முன்னேற்றம் அடையப் பெற்றுள்ளது.

| செயற்பாடு | நிதிசார் இலக்கு ரூபா | நிதிசார் முன்னேற்றம் ரூபா | பௌதீக முன்னேற்றம் |
|---|---|---|---|
| 120-02-03-04(2502)-11<br>கெகுலு உதானய | 23.0002 | 21.111 | வீட்டை அடிப்படையாகக் கொண்டு முன்பள்ளிப் பருவத்தை அபிவிருத்தி செய்கின்ற 'செனஹெ தட்டாக்க' நிகழ்ச்சித்திட்டத்தினை, பயனாளிகள் 16,271 பேருக்காக பிரதேச செயலாளர் மட்டத்தில் அமுல்படுத்தியமையும், சிறுவர் மைய அலுவலர்கள் 791 பேருக்கான அறிவுறுத்தல் நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டமையும். இதற்கென 1.7665 மி.ரூ. செலவிடப்பட்டுள்ளது. |
| | | | முன்பள்ளிப் பருவ சிறுவர்களின் உணவும், போசாக்கும் பற்றி பெற்றோரையும், முன்பள்ளிப் பருவ ஆசிரியைகளையும் அறிவுத்துவதற்கான போசன மங்பெத்த நிகழ்ச்சித்திட்டம் நடாத்தப்பட்டமை. இதில் பெற்றோர் 14309 பேர் கலந்து கொண்டுள்ளார்கள். இதற்கென 1.47 மி.ரூ. செலவிடப்பட்டுள்ளது. |
| | | | முன்பள்ளிப் பருவ அபிவிருத்தி நிலையங்களின் ஆசிரியர்கள் 10072 பேருக்கு பயிற்சி ஆற்றல்களை அபிவிருத்தி செய்வதும், முன்பள்ளிப் பருவ அபிவிருத்தி பற்றிய டிப்ளோமா பாடநெறிக்குப் பதிவு செய்வதும் மேற்கொள்ளப்பட்டது. இதற்கென 2.6978 மி.ரூ. செலவிடப்பட்டுள்ளது. |
| | | | முன்பள்ளிப் பருவ அரவணைப்பு மற்றும் அபிவிருத்தி தொடர்பாக இலங்கையில் அமுல்படுத்தப்பட்டுள்ள சகல சேவைகளையும் முறையாக அமுல்படுத்தும் பொருட்டு அரச |

| | | | |
|---|---|---|---|
| | | | மற்றும் அரசசார்பற்ற அமைப்புகளுடன் இணைந்ததாக குழுக்களை பேணிவருதல். இதற்கென 0.436 மி.ரூ. செலவிடப்பட்டுள்ளது.<br>➢ முன்பள்ளிப் பருவ அரவணைப்பு மற்றும் அபிவிருத்தி பற்றிய தேசிய ஒருங்கிணைப்புக் குழு<br>➢ முன்பள்ளிப் பருவ அரவணைப்பு மற்றும் அபிவிருத்தி பற்றிய மாகாண ஒருங்கிணைப்புக் குழு<br>➢ முன்பள்ளிப் பருவ அரவணைப்பு மற்றும் அபிவிருத்தி பற்றிய மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு<br>➢ முன்பள்ளிப் பருவ அரவணைப்பு மற்றும் அபிவிருத்தி பற்றிய பிரதேச ஒருங்கிணைப்புக் குழு<br>➢ முன்பள்ளிப் பருவ அரவணைப்பு மற்றும் அபிவிருத்தி பற்றிய கிராமிய ஒருங்கிணைப்புக் குழு |
| | | | ரிக்கிரி மிதுரு ஊடகப் பிரச்சார நடவடிக்கைகள் மற்றும் வெளியீடுகளுக்காக 1.048 மி.ரூ. செலவிடப்பட்டுள்ளது. |
| | | | இலங்கையில் முன்பள்ளிப் பருவ குழந்தைகளின் அரவணைப்பு மற்றும் அபிவிருத்தி தொடர்பாக சகல தரப்பினர்களையும் அறிவுறுத்தல் மற்றும் அவர்களின் உணர்வுப்பூர்வமான தன்மையை மேம்படுத்துவதற்காக டிசம்பர் 14 முதல் 20 வரை முன்பள்ளிப் பருவ அரவணைப்பு மற்றும் அபிவிருத்தி பற்றிய தேசிய வாரம் கொண்டாடப்பட்டமை.<br>இதன் போது செயலமர்வுகள், கல்விச் சுற்றுலா, அனுபவப் பரிமாற்றல் நிகழ்ச்சித்திட்டங்கள், பாலர் பாடசாலை கற்கை உபகரணங்களைப் பெற்றுக் கொடுத்தல், முன்பள்ளிப் பருவ அரவணைப்பு மற்றும் பாதுகாப்பு பற்றி மக்களை அறிவுறுத்தல் போன்ற செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டதுடன், இதற்கென 4.5 மி.ரூ. செலவிடப்பட்டுள்ளது. |
| 120-02-03-12(2502)-11<br>முன்பள்ளிப்பருவ அரவணைப்பு | 22.000 | 17.905 | 27 பாலர் பாடசாலைகளில் இந்த ஆண்டில் விளையாட்டு முற்றங்கள் அமைக்கப்பட்டதுடன், இதற்கென 0.810 மி.ரூ. செலவிடப்பட்டுள்ளது. மேலும் மட்டக்களப்பு பிரதேச செயலாளர் பிரிவில் விசேட கருத்திட்டமொன்றின் கீழ் 1.190 மி.ரூ. செலவிடப்பட்டு விளையாட்டு முற்றமொன்று நிர்மாணிக்கப்பட்டுள்ளது. |
| | | | பாலர் பாடசாலை மாணவர்களுக்கு சுத்தமான குடிநீர் வழங்குவதற்காக 61 பாலர் பாடசாலைகளுக்கு குடிநீர் வழங்கப்பட்டமை. |
| | | | தெரிவு செய்யப்பட்ட கிராம அலுவலர் பிரிவுகளிலிருந்து தெரிவு செய்யப்பட்ட 10 கிராமங்களை முன்பள்ளிப் பருவ அபிவிருத்தி மாதிரிக் கிராமங்களாக மேம்படுத்தல். இதற்கென 4.26 மி.ரூ. செலவிடப்பட்டுள்ளது. |

| | | | |
|---|---|---|---|
| | | | தோட்டப்புறங்களை மையமாகக் கொண்டுள்ள 22 பாலர் பாடசாலைகளுக்கு மலசலகூட வசதிகளை மேம்படுத்தல். இதற்கென 1.65 மி.ரூ. செலவிடப்பட்டுள்ளது. |
| | | | சிறுவர் செயலகத்தின் வள நிலையத்தை அபிவிருத்தி செய்தல், செத்சிறிபாய வளவில் பகல்நேர பராமரிப்பு நிலையத்தை அபிவிருத்தி செய்தல், மாவட்ட செயலக வளவுகளில் வள நிலையங்களைத் தாபித்தல், பாலர் பாடசாலைகளுக்கு கற்கை உபகரணங்களைப் பெற்றுக் கொடுத்தல் ஆகிய பணிகள் இந்த ஆண்டில் வெற்றிகரமாக அமுல்படுத்தப்பட்டன. இதற்கென 5.495 மி.ரூ. செலவிடப்பட்டுள்ளது. |